Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆழிப்பேரலையிலிருந்து (சுனாமியிலிருந்து) உலகை காக்கும்

ஸ்ரீ தீர்த்தபாலகர்

ஆன்மீக ரத்னா. கொல்பேர் ஜெயபாலன்

CC-0.In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy,

www.shreetheerthabalagar.com

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ தீர்த்தபாலகர்

ஆசிரியர்:

ஆன்மீக ரத்னா. **கொல்பேர் ஜெயபாலன்**

(Rtd. French Military)

வெளியிடுவோர்:

ஜெயக்கொடி பதிப்பகம்

ஜெயக்கொடி இல்லம்

நெ. 2, ஐயனார் கோயில் வீதி,

ராஜாநகர், புதுச்சேரி - 605 013.

www.shreetheerthabalagar.com

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உரிமை : ஆசிரியருக்கே

ஸ்ரீ தீர்த்தபாலகர் • © ஆன்மீகரத்னா. கொல்பேர் ஜெயபாலன் • இரண்டாம் பதிப்பு : ஜூன் 2009 • பக்கம் : 76 • வெளியீடு : ஜெயக்கொடி இல்லம், நெ. 2, ஐயனார் கோயில் வீதி, ராஜாநகர், புதுச்சேரி - 605 013.

[redacted]

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803., நாகை மாவட்டம்.
தொலைபேசி எண்: 04364 - 232021

"அருள் வாழ்த்துரை"

நாள்: 06 JUN 2007

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

ஒன்றா உலகனைத்தும் ஆனார் தாமே
ஊழிதோறு ஊழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர், வளி, தீ ஆகாசம் ஆனார் தாமே
கொன்றாடும் கூற்றை உதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே
திருவாலங்காடுறையும் செல்வர் தாமே - அப்பர் தேவாரம்.

"ஆழிப் பேரலையிலிருந்து (சுனாமியிலிருந்து) உலகைக் காக்கும் ஸ்ரீ தீர்த்தபாலகர்" என்ற தாங்கள் எழுதி வெளியிட்ட நூல் கிடைக்கப் பெற்றோம்.

நம் ஆதீன வெளியீடான " **மகா பைரவர்** " என்ற நூலிலிருந்து " **தீர்த்தபாலகரை** " இனம்கண்டு உலக நலன் கருதி அம்மூர்த்தியை முறைப்படி உருவாக்கி வழிபட்டு வழிகாட்டும் தங்களின் சமய, சமுதாயத் தொண்டு மிகவும் பாராட்டுதற்குரியது. மேலும் தங்களின் நூலில் தீர்த்தபாலகர் பற்றிய குறிப்புகளும், கோபுரகலசங்கள், அரசமரம், திருக்கோயில் வழிபடும் முறை போன்ற செய்திகளும், தீர்த்தபாலகர் பற்றிய தோத்திரங்களும் ஆன்மீக அன்பர்களுக்கு நற்பலன்களைத் தருபவை. நூலாசிரியரின் இவ்வரிய முயற்சி மேலும் சிறக்கவும், இவை போன்ற தெய்வத் திருப்பணிகள் தொடர்ந்து வெற்றி பெறவும், இதனைப் படிக்கும் அன்பர்களும் தரிசிக்கும் அடியார் பெருமக்களும் இம்மை மறுமை நலன்களை நிறைவுறப் பெற்று நீடுநல்வாழ்வுவாழவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இணைப்பு : திருநீற்றுச் செல்வம்

பெறுநர் : சைவத்திரு. கொல்பேர் ஜெயபாலன் அவர்கள்,
ஜெயக்கொடி இல்லம்,
எண்.2, ஐயனார் கோயில் தெரு,
ராஜா நகர், புதுச்சேரி - 605 013.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

PHONE : 2456655

"KAILAI MA MUNIVAR "
THIRU VALAR THIRU KASIVASI
MUTHUKUMARASWAMI TAMBIRAN
SWAMIGAL

SIVA SIVA

HEAD OF KASITHIRU MADAM
TIRUPANANDAL - 612 504.
THANJAVUR DISTRICT

நாள்: 23.05.2009.

வாழ்த்துரை

'ஸ்ரீ தீர்த்த பாலகர்'- எனும் புது கடவுள் வடிவை, அம்சத்தை அமைத்து வழிபாடும் திருக்கோயிலும் ஏற்படுத்தியுள்ள திரு. கொ. ஜெயபாலன் அவர்கள் பணியைக் கேள்வியுற்று மகிழ்கிறோம்.

திக்குப் பாலகர், துவார பாலகர் எனும் வகையில் காத்திடும் கடவுள் வடிவமைத்துப் போற்றுவதுடன், 'ஸ்ரீ தீர்த்த பாலகர்' எனும் நூலை எழுதி, அதில் பல்வேறுபட்ட பாராயண நூல்களை, வழிபாட்டு முறைகள், தொடர்புடைய சமயக் குறிப்புகள் ஆகியவற்றையும் இணைத்திருப்பது பொருந்தியதே.

உலகியல் கவர்வுகளில் ஆட்படாது அருளியல் நெறியில் நல்லன இயற்றிவரும் திரு. ஜெயபாலன் பணிகள் சிறந்திடவும், தீர்த்தபாலகரின் மெய்ம்மையை உணர்ந்து பலரும் வழிபடவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

பெறுநர்:-

'ஆன்மீக ரத்னா' கொல்பேர் ஜெயபாலன்,
செயலர்-புதுச்சேரி முருக பக்தர்கள் நற்பணி மன்றம்.
நம்பர்- 2, ஜெயக்கொடி இல்லம், அய்யனார் கோயில் தெரு.
ராஜா நகர், புதுச்சேரி - 605 013.

தொலைபேசி: 2201402.

க.அ.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாழ்த்துரை

Siddantha Ratnam
Prof. **DR. V. GOPAL,** M.Pharm,Ph.D.,M.I.S.T.E.,F.I.C.S.
Principal - College of Pharmacy
Registrar Academic - Mother Theresa Institute of Health Sciences
(A Government of Puducherry Institution)
Indira Nagar, Gorimedu, Puducherry - 605 006.

Mobile : 98948 32221, Res : 0413 - 2272548, E-mail : gopalveni@yohoo.com
Fax : 0413 - 2277594, Off : 0413 - 2273008, 2271200, 2272445

To

The various forms of water - the life in this universe.

It gives me great pleasure to pen a few words for Sri. Colbert Zeabalane.

He is an authentic Hindu. He loves to critically analyse data and arrive at truth.

His love for truth is reflected in this book. He was blessed by the almighty to have an intution on Shree Theerthabalagar and has given shape to his intution and built a temple for Shree Theerthabalagar.

I am happy to understand that this book is the first guide to get the blessings of Shree Theerthabalagar.

Water is vital for the existence of life in this world. The comptroler of water is Shree Theerthabalagar. Water management is best practised arly with the blessings of shree Theerthabalagar.

We shall know Theerthabalagar, acknowledge his services, seek his blessings & prosper.

For the betterment of all human, I request Shri. Colbert Zeabalane to publish the complete route map to attain divine grace of Shree Theerthabalagar.

I am thankful for the opportunity given.

V. கோபால் 20/5/10

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம் காளி! உ ஜெய் காளி!!

இந்து முன்னணி

புதுச்சேரி மாநிலம்

நெ.10, முருகன் கோவில் வீதி, உருளையன்பேட்டை, புதுச்சேரி-5. செல் : 94432 77723

தேதி : ....

உ

[illegible] வேதக் காலம் [illegible]

[illegible] உலகுக்கு

உலகுக்கு பரப்புரை செய்துள்ள தீர்த்தர்

[illegible]

அத்துணைக்கும் பாராட்டுக்குரிய [illegible]

சென்னை [illegible]

பெருமைப்பட்ட இருக்கிறோம்

இவரை [illegible]

[illegible]

சேவைத்துறை தொண்டு செய்யப் பிரார்த்திக்கிறேன்

[illegible]

இராம. கோபாலன்

28/6/09

இந்து முன்னணி நிறுவனர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீ தீர்த்தபாலகர் இரண்டாம் பதிப்பை
திரு. **இராமகோபாலன்**
இந்து முன்னணி நிறுவனர் அவர்கள்
ஆசிரியர் **கொல்பேர் ஜெயபாலன்**
அவர்களிடம் பெற்றுக்கொள்கிறார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

V.T. KATHAVARAYAN @ COLBERT. C
EDUCATIONAL TRUST

NEAR NEW BUS STAND
4, AYYANAR KOIL STREET, RAJA NAGAR,
PONDICHERRY - 605 013

Phone :

Ref : Date : 25.06.2005

உயர்திரு. இந்தியக் குடியரசுத் தலைவர்,
ராஷ்டிரபதி பவன்
புதுடெல்லி.

பொருள் : நாஸா வெளியிட்ட, இராமனுக்காக அநுமன் கட்டிய பாலம் பற்றியது:-

விஞ்ஞான உலகின் புகழ்மிக்க இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கட்கு, மிகுந்த வணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொண்டது.

ஐயா,

நான் பாண்டிச்சேரியில் பிறந்த French பிரஜை. French ராணுவத்திலும், பின் Frence Prime Minister அலுவலகத்திலும்பாரதத்தின் சுமார் 18 ஆண்டுகள் பணிபுரிந்து, ஓய்வூதியம் பெற்ற பின், பிறந்த மண்ணிற்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் 1992இல் பாண்டிச்சேரிக்கு மீண்டும் வந்தேன். 1992 முதல் 1994 வரை 3 வருடங்கள், கோடைகால இளவச சமஸ்கிருதப் பாடசாலை நடத்தினேன். பிறகு 1994 முதல் 2004 வரை என் தகப்பனார் V.T.KATHAVARAYAN என்ற பெயரில் அரசு அனுமதிப் பெற்று I.T.I. ஒன்றை நடத்தி, என் மனநிறைவுக்கேற்ற சிறந்த தொழிற் கல்வி மாணவர்களை உருவாக்கினேன். 2001 முதல் என் பிள்ளைகள் பெயரில் ANAND ASHOK ENGLISH SCHOOL ஒன்றையும் நடத்தி வருகிறேன்.

சேது சமுத்திர திட்டம் (விழா) 02-07-2005இல் ஆரம்பிக்க இருப்பதினால், காலம் மிகவும் குறுகி இருப்பதினால், எனக்கு வேறு வழி தெரியாததினால், இந்தியக் கலாச்சாரத்தின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என்ற உண்மையான நோக்கத்தினால், இக்கடிதத்தைத் தங்களுக்குத் தாழ்மையுடனும், வணக்கத்துடனும் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

... 2/-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓ

V.T. KATHAVARAYAN @ COLBERT. C
EDUCATIONAL TRUST

NEAR NEW BUS STAND
4, AYYANAR KOIL STREET, RAJA NAGAR,
PONDICHERRY - 605 013

Phone :

Ref :

Date : 25.062005

-2-

பாரதத்தின் முதல் வீரக்காவியமான, இராமாயணத்தில் இராமனுக்காக, அநுமன் கற்பாலம் ஒன்றைக் கட்டியதாகக் குறிப்பிட்டுள்ளதை, அமெரிக்காவின் (NASA) நாஸா விண்வெளிக்கழகம், எடுத்த புகைப்படங்களில், அநுமன் கட்டிய கற்பாலம் கடலுக்கடியில் மூழ்கி இருப்பதை படம் பிடித்துள்ளது. இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையில் மூழ்கி இருக்கும், இக்கற்பாலம் அமெரிக்கர்களால் உலகிற்கு வெளிப்படுத்தியபோதும் இந்திய கடல் அகழ்வாராய்ச்சித் துறையினருக்கோ அல்லது இந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கோ இதில் அக்கறை இல்லை. காலத்தால் நிர்ணயம் செய்ய இயலாத பழமை வாய்ந்தது இந்தக் கற்பாலம். இந்திய நாகரீகத்தின் சிகரம்மாகத் திகழவேண்டிய இக்கற்பாலம், கடலுக்குள் கிடக்கும் கல்லாகவே கிடக்கிறது. எனவே தங்களின் கருணை இக்கற்பாலத்திற்குக் கிடைக்குமானால், பண்டைக்கால இந்திய நாகரீகம், கட்டுமானத்தின் தொழில் நுட்பம், பொறிஇயல் வலிமை ஆகியவற்றைக் கண்டு இவ்வுலகமே வியக்கும். எனவே உலகம் போற்ற இருக்கும் சேது சமுத்திரத் திட்டம் 02-07-2005இல் ஆரம்பிக்க இருக்கிறது. தமிழர்களின் கனவின் வெற்றித் திருநாள் அது. கடலை ஆழப்படுத்தும்போது சற்று கவனம் செலுத்தி நாஸாவின் விபரமான புகைப்படங்களைப் பெற்று, மூழ்கி இருக்கும் பாலத்தின் கற்களை பழுதுபடுத்தாமல் இராமேஸ்வரத்தின் ஒரு பகுதியில் சேர்த்து, அக்கற்களைக்கொண்டு, தரைப்பாலம் ஒன்றை உருவாக்க வேண்டும். அப்போது ஹரப்பா-மொகஞ்சதாராவுக்கு முன்னமே இந்திய நாகரீகம் சிறந்து விளங்கியது உண்மை என்பதையும், இந்தியாவின் நாகரீகம் உலகின் பழமையான நாகரீகம் என்பதையும் இவ்வுலகத்திற்கு உணர்த்த முடியும். இத்துடன் என் வசம் உள்ள 2 நாஸா புகைப்படங்களையும் இணைத்துள்ளேன். தங்களின் மேன்மையான எண்ணங்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

நன்றி

இப்படிக்கு

கொல்பேர் ஜெயபாலன்
Principal V.T.K- I.T.I

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்

ANAND ASHOK ENGLISH SCHOOL * PONDICHERRY * ZEACODY

V. T. Kathavarayan Educational Trust's

ANAND ASHOK ENGLISH SCHOOL

PONDICHERRY - 10

Correspondent : COLBERT ZEABALANE
கொல்பேர் ஜேயபாலன்

Date : 03-01-2007

பெறுநர்
இந்தியக் குடியரசுத் தலைவர்,
ராஷ்டிரபதி பவன்
புதுடெல்லி.

பொருள் : 94வது "புவிக்கோள்" இந்திய அறிவியல் மாநாட்டிற்காக இடி-மின்னல் ஏன், எப்படி ஏற்படுகிறது?

பாரத குடியரசுத் தலைவருக்கு சிறப்பு மிகுந்த 2007 ஆம் ஆண்டில் தங்களின் தொண்டு மேன்மேலும் சிறந்து விளங்க இறைவனை வேண்டி என் தாழ்மையான இப்புத்தாண்டு வணக்கங்களை சமர்ப்பணம் செய்கிறேன்.

ஐயா!

தாங்கள் பெரிதும் விரும்பும், இவ்வுலக மாணவச் சமுதாயத்திற்கு இன்றுவரையும் தீர்க்கமான ஒரு விளக்கத்தை இடி-மின்னலைப் பற்றி எவரும் வரையறுத்துக் கூறவில்லை. 1948ஆம் ஆண்டில் France நாட்டில் நடந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் அரசியல் என்ற ஒரு பாடத்தை அறிவியலாக்கிய பெருமை அந்நாட்டிற்குக் கிடைத்ததைப்போல், இடி மின்னலைப் பற்றிய திடமான ஒரு முடிவை, தமிழ் நாட்டு மாநாட்டில் தீர்க்கப்பட்டு, தமிழகத்திற்குப் பெருமை ஏற்பட வேண்டும் என்பதே என் ஆவல். உங்களின் ஆட்சிகாலத்தில் இதற்கு முடிவு ஏற்பட்டால் இதைவிட பெரிய ஆனந்தம் இருக்கமுடியாது.

இதன் பொருட்டு என் கருத்தினையும் தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். இப்படி மக்களின் கருத்துக்களை, இனிவரும் காலங்களில், தமிழ்

...2/-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மொழியில் குடியரசுத் தலைவருக்கு எழுதும் பாக்கியம் வருமா? என்பது இறைவனுக்கே வெளிச்சம்.

ஆகாயத்தில் பலகோடி வருஷங்களாகத் தோன்றி மறைந்தது போக எஞ்சியுள்ள (கணக்கற்ற) சூரிய மண்டலங்களில் ஏற்படும் இயற்கை மற்றும் செயற்கை மாற்றங்களால், உண்டாகும் மின் காந்த சக்தி அலைகள், மேல் நோக்கிச் சென்று, பல மண்டலங்களைக் கடந்து சென்று இதற்குமேல், மேலே செல்ல முடியாது என்ற நிலை ஏற்பட்டு, நின்ற காந்த அலைகள். பலகோடி வருடங்களாகத் தொடர்ந்து மேலேச் சென்று, சென்று, இறுகி, இறுகி அழுத்தம் மேலிடுகிறது. இதனால் உள், மையப்பாகம் கருமை நிறைந்த நீலமாகவும் கீழ்ப் பகுதியில் உள்ள (நம் கண்ணிற்குத் தெரியும்) வெளிப்பாகம் காந்தத்தின் புறப்பகுதியான வெண்மை நிறைந்த நீலமாகவும் தெரிகிறது.

காந்த மண்டலத்தின் உட்பகுதி கடினத்தன்மையானதாக இருக்கும் என்பதற்கு உதாரணம். பூமியில் வெளிப்படும் கழிவு நீரானது, சாக்கடை, மற்றும் வாய்க்கால் வழியாக ஓடும்போது, பூமியின் உள் நோக்கி இறங்குவது இயல்பு. அவ்வாறு இறங்கி நிலத்தடி நீர் உயர்வது இயற்கையானது. ஆனால் இக்காலத்ல் நிலத்தடி நீர் குறைந்துகொண்டே இருக்கிறது. காரணம் கழிவு நீரில் உள்ள ரஸாயனப் பொருள்கள் பூமியின் உட்பகுதியில் சென்றவுடன் பாறைபோல் கடினத்தன்மைப் பெற்றுவிடுகிறது. இதனால் மேற்கொண்டு கழிவுநீர், உள் நோக்கிச் செல்ல முடியாமல் பூமியின் மேல்பரப்பிலேயே ஓடி கடலில் கலந்து விடுகிறது. இதே முறையில்தான் விண்ணில் காந்த சக்தியும் கடினத்தன்மை பெறுகிறது. இவ்வாறு கடினத்தன்மை பெற்றள்ள காந்த மண்டலத்திற்குள் திடீர் வெற்றிடம் ஏற்படும்போது, வெற்றிடத்தின்

... 3/-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்

ANAND ASHOK ENGLISH SCHOOL * PONDICHERRY * ZEACODY

V. T. Kathavarayan Educational Trust's

ANAND ASHOK ENGLISH SCHOOL

PONDICHERRY - 10

Correspondent : COLBERT ZEABALANE
கொல்பேர் ஜெயபாலன்

Date : ....

மையப்புள்ளியை நோக்கி 360^{0} க்கு சுற்றிலிலிருந்து உள்நோக்கி பாயும் காந்த அலைகள் மையப்புள்ளியை, வேகமாகச் சென்றடையும்போது அங்கே ஏற்படும் அதிர்ச்சி கீழ் நோக்கி வீசப்படுகிறது. அவ்வாறு வீசப்படும் காந்த சக்தியின் ஒரு பகுதி, நம் சூரிய மண்டலத்தின் திசையை நோக்கியும் வீசப்படுகிறது.

நம் சூரிய மண்டலத்தின் ஒரு பகுதியாகிய நம் பூமியின் காற்று மண்டலத்திற்குள், காந்த அலைகள் நுழையும்போது, ஏற்படும் சத்மே இடி எனப்படுகிறது. காந்த அலைகளின் வேகத்தின் தன்மைக்கேற்ப, இடியின் ஆர்ப்பரிப்பின் பயங்கரம் வெளிப்படுகிறது. காற்று மண்டலத்தின் மேல் பரப்பின் ஆரம்ப எல்லையில் உருவமும் (ஒளி) சத்தம் (ஒலி) வெளிப்படுகிறது. ஆனால் இவை இரண்டும் ஏற்படுவதற்றுகு உண்டான சக்தி ஆகாயத்தின் காந்த மண்டலத்தில் ஏற்படும் மின்காந்த அழுத்த நிலையிலிருந்தே உண்டாகிறது என்பதே என் தாழ்மையான கருத்து.

ஐயா! இதுவே என் எண்ணம் தங்களின் விலை மதிப்பிற்கு மேற்பட்ட நேரத்திற்கு என் இக்கடிதம் இடையூறை ஏற்படுத்தி இருக்குமானால், தயைகூர்ந்து என்பிழையை பொறுத்தருளுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

வணக்கத்துடன்,

COLBERT ZEABALANE
(Rtd. French Military)
Correspondent & Principal
ANAND ASHOK ENGLISH SCHOOL
Perambai Road, Paris Nagar,
Moolakulam Puducherry- 605 010.

✉ - Perambai Road, Moolakulam, Pondicherry - 605010.

சேலத்தில் நடந்த 94ஆவது "புவிக்கோள்" இந்திய அறிவியல் மாநாட்டிற்காக குடியரசுத் தலைவருக்கு எழுதியக் கடிதம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம் சக்தி துணை

புதுவை ராஜா நகர்

ஸ்ரீ நாகமுத்து மாரியம்மன்
நூதன விக்ரஹ கும்பாபிஷேக பத்திரிகை.

அன்புடையீர்,

நிகழும் அட்சய ஆண்டு பங்குனித்திங்கள் 4-ம் நாள் 18-3-87 புதன்கிழமை சித்ரா நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினம் காலை 6 மணிக்குமேல் 7 மணிக்குள் மீன லக்கினத்தில்,

ஸ்ரீ நாகமுத்து மாரியம்மன், பால விநாயகர், பாலமுருகன், காத்தவராயன், சிம்பம், பலிபீடம்,

சுவாமிகளுக்கு மகா கும்பாபிஷேகம் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெறும்.

17-3-87 பங்குனி 3-ந் தேதி மாலை 4-30 மணிக்குமேல் ஸ்ரீ விநாயகர் பூஜை, தனபூஜை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்பணம், முதல்கால யாக பூஜை இரவு யந்திரபிரதிஷ்டை செய்து, அஷ்டபந்தன மருந்து சாத்துதல்.

18-3-87 அதிகாலை இரண்டாம் கால யாக பூஜை பூர்ணாகுதி, யாத்ராதானம்.

காலை 6 மணியிலிருந்து 7 மணி வரை மீன லக்கினத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

மாலை மகாபிஷேகம் நடைபெறும்.

இங்ஙனம்,

ஆலய நிர்வாகிகள்

ஐயனார் கோயில் வீதி, ராஜா நகர், பாண்டி-13.

மேற்படி சிலைகள் செய்து கும்பாபிஷேக கைங்கரியம் செய்பவர்கள்

கொல்பேர் காத்தவராயன் - ரத்தினம்மாள்

இவர்களின் மகனும் மருமகளும்

கொ. ஜெயபாலன் - மின்னல்கொடி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai





எங்கள் குடும்பத்தினரால் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் பொம்மபுர ஆதீன தலைமையில் குடமுழுக்கு செய்விக்கப்பட்டது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai





காமராஜர் சாலை சந்திப்பில் கோவிந்தசாலை ஆரம்பத்தில்
உள்ள சுந்தரவிநாயகர் ஆலயத்தில் முதன்முறையாக குரு
தட்சிணாமூர்த்திக்கு கும்பாபிஷேகம் செய்வித்தல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சோதி நீ

செயபாலன் கருவறையில்
உதித்த சோதி
ஒருபத்தில் கருவாகி
இருபத்தில் உருவாகி
முப்பத்தில் பொருளாகி
நாப்பதில் வேதமாகி
ஐம்பதில் ஓங்கார
உட் பொருளாகி
அறுபதில் சத்சித்
ஆனந்தத்தின் பருப்பொருளாய்
பார்காக்கும் நீர்தரும் பாலனாய்
பாருக்கு ஆலயமாய்
ஆனந்தப் பொருளாய்
அவதரித்தாய் இன்று..

வாழ்த்துபவர்
G.நடராஜன், M.A., B.Ed.,
16, முதல் வீதி, அண்ணா நகர், புதுச்சேரி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection- Sholinganallur- Chennai

ஓம்

ஸ்ரீ V. T. காத்தவராயன்

கல்வி அறக்கட்டளை நடத்தும்

ஸ்ரீ லலிதாம்பிகை வேத சிவாகம

கோடைக்கால இலவச பயிற்சி முகாம்

நிகழும் யுவ ஆண்டு சித்திரை மாதம் 7-ம் நாள் [20—4—95] வியாழக்கிழமை மூல நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10-30 மணிமுதல் 12-00 மணிவரை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி இலவச வேத சிவாகம பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்படுகிறது.

★ நிகழ்ச்சி நிரல் ★

காலை 6-30 மணிக்குமேல் : கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம் மேதா தட்சணாமூர்த்தி ஹோமம் நடைபெறும்.

தலைமை : Dr. V. குரும்ப சாஸ்திரி
பேராசிரியர் & தலைமை
சமஸ்கிருதத்துறை, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்.

வாழ்த்துரை : ஜோதிஷம் S. சிதம்பர குருக்கள்

திரு. சம்மந்த சிவாச்சாரியார்
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், புதுவை-1.

ஜோதிஷம் N. நாகசுப்பிரமணியம் குருக்கள்
காமாட்சி அம்மன் கோயில், புதுவை.

திரு. காசிக் கண்ணன் ஜோதிடர்

ஆசிரியர்கள் : C. சீதாசங்கர குருக்கள் M.A.,M.Phil. (Sanscrid)
ஆகமரத்தினம்

C. சீதா ராம குருக்கள்
வைதீக சிவாகம சிரோமணி.

இவண்,
கொ. ஜெயபாலன்
நிர்வாகி.

புதுச்சேரியில் முதன்முதலில்
தொடங்கப்பட்ட சமஸ்கிருத பாடசாலை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ V.T. காத்தவராயன்

கல்வி அறக்கட்டளை நடத்தும்

ஸ்ரீ லலிதாம்பிகை வேத சிவாகம

கோடைக்கால இலவச பயிற்சி முகாம்

நிகழும் தாது ஆண்டு சித்திரை மாதம் 27-ம் நாள் (9—5—1996) வியாழக்கிழமை உத்திராட நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 10-30 மணிமுதல் 12-00 மணிவரை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி இலவச வேத சிவாகம பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்படுகிறது.

காலை 6-30 மணிக்கு மேல் : கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம்.
மேதா தட்சணாமூர்த்தி ஹோமம் நடைபெறும்.

தலைமை : **Dr. V. குடும்ப சாஸ்திரி**
பேராசிரியர் & தலைமை
சமஸ்கிருதத்துறை, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்

வாழ்த்துரை : ஜோதிஷம் **S. சிதம்பர குருக்கள்**

ஆசிரியர்கள் : **C. கீதா.சங்கர குருக்கள்** M.A. M.Phil. [Sanskrit]
ஆகமரத்தினம்

C. கீதா ராம குருக்கள்
வைதிக சிவாகம சிரோமணி

இவண்

கொ. ஜெயபாலன்
நிர்வாகி

நெ. 4, ஐய்யனார் கோவில் வீதி, ராஜா நகர்
[புதிய பஸ் நிலையம் அருகில்] புதுவை 13

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உள்ளுறை

	பக்கம்
ஸ்ரீ. தீர்த்தபாலகர்	22
சிதறும் சைவ மதம்	25
சைவ, வைணவ கோயில் சுவற்றில் வண்ணம் பூசுதல்	26
கோபுரக் கலசங்களின் பரிதாப நிலை	28
அரசமர ஸ்லோகம்	30
SHREE THEERTHABALAGAR	32
108 என்ற எண்ணிக்கையின் விளக்கம்	34
அனைவரும் நன்மைபெற	35
ஸ்தோத்திர கதம்பம்	37
காரிய சித்தி மாலை, கணபதி தியானம்,	
விநாயகர் அகவல்	38
சிவ பெருமான் துதிகள், திரு நந்தி தேவர் துதி	40
சண்டிகேசுவரர் துதி, நால்வர் வழிபாடு	
சிவபுராணம்	42
திருஆரூர் போற்றித் திருத்தாண்டகம்	44
திருமணம் கூட்டிவைக்கும் தீந்தமிழ் திருப்பதிகம்	46
காமாட்க்ஷி அஷ்டகம், மீனாக்ஷி ஸ்துதி	48,49
ப்ரத்தியங்கிரா, அபிராமியம்மை பதிகம்	
ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை	50
ஸ்ரீ அன்ன பூரணாஷ்டகம்	52
பைரவி, முருகப்பெருமான் வணக்கம்,	53,54
சண்முக கவசம்	55
கந்தர் சஷ்டி கவசம்	58
குமாரஸ்தவம்	64
மகாவிஷ்ணு, திருமால், ப்ரம்மா,	66,67
சரஸ்வதி துதி, ஸ்ரீ ஐயப்பன் வழிநடைப் பாடல்,	
ஆஞ்சநேயர், சூரிய நமஸ்காரம்,	68
ஸ்ரீ தீர்த்தபாலகர்பாடல்கள்	69
ஸ்ரீ தீர்த்தபாலகர்போற்றி	71
நவகிரஹ ஸ்துதி	75

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அறிமுகம்

வணக்கம் !

கொல்பேர் ஜெயபாலனாகிய நான் ஒரு பிரெஞ்சு நாட்டு பிரஜை. ஆனாலும் நான் பிறந்து வளர்ந்தது புதுவையிலே. பிரெஞ்சு ராணுவத்தில் 15 வருடங்களும், பிரெஞ்சு நாட்டு பிரதமர் அலுவலகத்தில் மூன்று வருடங்களும் பணிபுரிந்து ஓய்வுப்பெற்று 1992 புதுவை திரும்பினேன். 1994இல் புதுவையில் முதல் முறையாக கோடைக்கால சமஸ்கிருத பள்ளியை ஆரம்பித்து மூன்றுவருடங்கள் தொடர்ந்து நடத்தினேன். அதே வருடம் என் தகப்பனார் பெயரில் V.T. காத்தவராயன் என்ற தனியார் I.T.I யை சிறந்த முறையில் 2005 வரை நடத்தினேன். இடையில் 2001இல் புதுவை அரசால் அங்கிகரிக்கப்பட்ட ஒரு தனியார் ஆங்கிலப் பள்ளியை என் பிள்ளைகள் பெயரில் Anand Ashok English Schoolஐ 2008 வரை நடத்தினேன். 2007இல் குருபூஜைக்காக திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்றேன். ஆதீன நூலகத்தில் ஒரு புத்தகத்தில் தீர்த்தபாலகர் என்ற சுவாமியைப்பற்றி படிக்கநேர்ந்தது. இதன் விளைவே கலியுகத்தின் ஆரம்பத்தில் இப்பூமிக்கு. ஸ்ரீ தீர்த்தபாலகர் புதுவையில் முதன்முறையாக சர்வதாரி வருடம் வைகாசி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் (என்னுடைய சஷ்டியப்த பூர்த்தி அன்று 08-06-2008) உருவம் பெற்றார். தமிழ் முறைப்படி குடமுழுக்கும் நடை பெற்றது 19-11-2008 புதன் கிழமை ஆயில்ய நட்சத்திரத்தில் பஞ்சலோக சிலை வடிக்கப்பட்டது. முதன்முறையாக 26-01-2009இல் தை அமாவாசையை முன்னிட்டு தீர்த்தவாரிக்கு, ஸ்ரீ தீர்த்தபாலகர் எழுந்தருளினார். அடுத்து வந்த மாசி மகத்திருவிழாவிற்கு 11-03-2009 தீர்த்தவாரிக்கு எழுந்தருளினார். மங்களகரமான விரோதி ஆண்டு வைகாசி மாதம் 16ஆம் தேதி (30-05-2009) ஆயில்ய நட்சத்திரத்தில் ஸ்ரீ தீர்த்தபாலகரின் குடமுழுக்கு முதலாம் ஆண்டு நிறைவு விழா அன்று ஸ்ரீ தீர்த்தபாலகருக்கான இரண்டு பாடல்களுடன் போற்றிகளும் அடங்கிய குறுந்தட்டுடன் இந்நூலையும் என் பெற்றோர்களுக்கு (கொல்பேர் காத்தவராயன்-ரத்தினம்மாள்) சமர்ப்பணம் செய்யும் இச்சிறந்த சூழ்நிலைக்கு என்னை ஆளாக்கிய தமிழ் பெரும் கடவுளான ஸ்ரீ செந்தில் ஆண்டவனுக்கும் அவர் தந்தை சிவபெருமானுக்கும் இப்பிறவியிலும் மீண்டும் பிறப்புண்டு என்றால் ஒரு சைவனாகவே பிறந்து என் பணிகளைத் தொடர அவன் அருளாலே அவன் தாள் வணங்கி இறைஞ்சி வேண்டுகிறேன்.

இந்நூல் எழுத மூலகாரணமான திருவாவடுதுறை குரு மகா சந்நிதானம் அவர்களுக்கும், கற்பனைக் கோயிலுக்கு வித்திட்ட பூசலார் நாயனார் அவர்களுக்கும் என்முதற்கன் நன்றிகலந்த வணக்கம் உரித்தாகுக.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்நூல் சிறப்பாக அமைவதற்கு ஒத்துழைப்பு தந்து ஊக்குவித்த என் மனைவி Minnalcody Colbert, என் மகன்கள் Anand Colbert, Ashok Colbert, என் மகள் Akila Colbert இவர்களுக்கும், என் இனிய நண்பர்களுக்கும், புதுச்சேரி முருக பக்தர்கள் நற்பணி மன்றத்தினர்களுக்கும், புதுச்சேரி, அண்ணா நகர், சைவ சித்தாந்தப் பெருமன்ற உறுப்பினர்களுக்கும் இந்நூல் அழகிய முறையில் வெளிவர ஆர்வமுடன் உதவிய V. துரைசாமி, P. சந்திரன் அவர்கட்கும், அருளாசி வழங்கி ஊக்குவித்த திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம், 23ஆவது குரு மகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும், கயிலை மாமுனிவர், திருப்பனந்தாள் திருவளர் திரு காசிவாசி முத்துக்குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் எனது இராம கோபாலன் நி.இ.முன்னனி அவர்களுக்கும் மனமுவந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

ஆன்மீக ரத்னா. கொல்பேர் ஜெயபாலன்
COLBERT ZEABALANE
(Rtd. French Military)
ஜெயக்கொடி இல்லம்
நெ. 2, ஐயனார் கோயில் வீதி, ராஜாநகர்,
புதுச்சேரி - 605 013.

23-12-2007 ஆம் தேதி நடந்த விழாவில் நீதியரசர் திருமிகு. சேது முருகபூபதி அவர்களால் திரு. கொல்பேர் ஜெயபாலன் அவர்களுக்கு "ஆன்மீக ரத்னா" விருதைவழங்கிச் சிறப்பித்தல்

மேலும் விவரங்களுக்கு www.shreetheerthabalagar.com

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மூதன் முறையாக உலகிற்கு புதுவை (கொல்பேர் ஜெயபாலன்) தந்த ஸ்ரீ தீர்த்தபாலகர்

தீர்த்தபாலகர் காயத்ரி : **கொ. ஜெயபாலன்.**

ஓம் தீர்த்த பாலகாய வித்மஹே
ஜல ஸம்ரமாய தீமஹி
தந்நோ தீர்த்தபாலக ப்ரஜோதயாத்

முகவுரை:

திருவாவடுதுறை ஆதீன வெளியீட்டில் கண்டுள்ள பைரவர் வழிபாட்டில் விவரிக்கப்பட்டிருந்த அருள்மிகு தீர்த்தபாலக(ர்) சுவாமியைப் பற்றி படித்ததிலிருந்து எப்படியாவது மேற்படி தீர்த்த பாலகரைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பல திருத்தலங்கள் சென்று முயற்சித்தும் தீர்த்த பாலகர் சுவாமியைக் காண முடியாதலால் கவலை அடைந்தேன் பின் ஆதின வெளியீட்டில் கண்டுள்ள அமைப்பின்படி நாமாவது தீர்த்த பாலகருக்கு சிலை எடுத்து வழி படுவோம் என்ற எண்ணம் எனது மனதில் ஆழமாக ஊன்றியது. அதன் விளைவாக உலகில் எங்கும்இல்லாத ஸ்ரீ தீர்த்தபாலகர் திருஉருவை பூசைக்கு ஏற்ற அளவில் கற்சிலை வடித்து (மாடல்) கோயில் ஒன்றும் அமைத்து

எனது சஷ்டியப்த பூர்த்தி நாளான சர்வதாரி வருடம் வைகாசி மாதம் வளர்பிறை (சுக்லபட்சம்) பஞ்சமி திதி ஆயில்ய நட்சத்திரத்தில் 08-06-08 ஞாயிற்றுக் கிழமை காலை 5.00 மணியளவில் சிவனடியார்கள் திருக்கூட்டத்தினரால் தமிழ்வேத முறைப்படி புதுவை ராஜா நகர் ஜெயக்கொடி இல்ல(ம்)மான எனது இல்லத்தில் அருள்மிகு **ஸ்ரீ தீர்த்தபாலக ஸ்வர்ணாகர்ஷண மகாபைரவர்** என்கிற கோயிலுக்கு கும்பாபிஷேகமும் செய்விக்கப்பட்டது. சுனாமி பயம் ஏற்பட்டுள்ள இக்காலத்தில், இப்படி ஈஸ்வர அம்சமான ஸ்ரீ தீர்த்தபாலகருக்கு உருவம் கொடுக்க மூலகாரணமான, திருவாவடுதுறை ஆதீன குரு மகா சந்நிதானம் அவர்களுக்கு என் முதல் வணக்கம். உலகிற்கு விவசாயம் மிகவும் அவசியமான ஒன்று. நீர் ஆதாரம், பொருளாதாரம், பாதுகாப்பு இவை மூன்றும் மிக முக்கியம். எனவே இவை மூன்றையும் தரும் ஈசுவர அம்சமான ஸ்ரீ தீர்த்தபாலகர், ஸ்வர்ணாகர்ஷண, மகாபைரவர் என்ற மூன்று தெய்வங்களுக்கும் இதுவரையும் இந்தியாவில் கோயில் ஏதுமில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

எனவே இந்து மக்களின் வளமான வாழ்வை நினைவில்கொண்டு பாரதம் முழுவதும் ஸ்ரீ தீர்த்தபாலக ஸ்வர்ணாகர்ஷண மகாபைரவர் ஆலயத்தை தோற்றுவித்தால் அனைவரும் சுகமாக வாழமுடியும் என்பதால் மேற்படி கோயிலை அமைத்துள்ளேன்.

ஸ்ரீ தீர்த்தபாலகர்:

புராணத்தில் நீர் ஆதாரங்களின் தலைவர் என்றும், ஆழிப் பேரலையிலிருந்து உலகைக் காப்பவர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆழிப்பேரலை என்றால் இன்றைய வழக்கில் ''சுனாமி'' என்று பொருள்.

நீர் ஆதாரங்களின் தலைவர் என்றால் பூமிக்கடியில் உள்ள நிலத்தடி நீரைக் காப்பவர், பூமியின் மேற்பரப்பில் (மகா நதி, நதி - ஆறு - வாய்க்கால் - குளம் ஆகியவற்றில்) நீர்வற்றாமல் பாதுகாப்பவர், மற்றும் பெரு மழைக்காலங்களில் வெள்ளத்திலிருந்து பூமியைக் காப்பவர், என்று பொருள்படுகிறார்.

எனவே வருடத்தில் மூன்று முறை நடைபெறும் தீர்த்தவாரியின் தலைவர் என்பதால், இவரை தரிசனம் செய்யவே அனைத்து சுவாமிகளும் கடற்கரைக்கும் - ஆறுகளுக்கும், தை அமாவாசை, மாசிமகம், (ஆற்றுத் திருவிழா) மற்றும் ஆடி அமாவாசைக்கும் எழுந்தருளுகின்றனர்.

நம்முடைய ஒரு வருடம், தேவர்களுக்கு ஒரு நாள் எனப்படுகிறது. தை அமாவாசை முதல் ஆடி அமாவாசை வரை உள்ள ஆறு மாதம், பகல் பொழுது. ஆடி அமாவாசை முதல், பிறகு வரும் தைஅமாவாசை வரை, இரவுப் பொழுது என்று கூறப்படுகிறது. தைஅமாவாசை காலைப் பொழுது என்பதால் அனைத்து தெய்வங்களும் நீர் நிலைகளுக்கு வந்து காலையில் நீராடுவதாகவும், ஆடிஅமாவாசை மாலை பொழுதின் ஆரம்பம் என்பதால் மாலையில் வந்து நீராடுவதாகவும் ஐதீகம். தீர்த்தவாரிக்கு வரும் அனைத்து தெய்வங்களும் கிழக்கு பார்த்து நிற்கும். ஆனால் ஸ்ரீ தீர்த்தபாலகர் மட்டும் கிழக்கில் நின்று, மேற்கு நோக்கி அருள்பாலிக்கும் தன்மையுடையவர். ஒரு புறம் கடல் சீற்றம் தன்னைத் தாண்டி ஊருக்குள் வரக் கூடாது என்பதற்காகவும், மறுபுறம் அனைத்து தெய்வங்களும் (பைரவர் மற்றும் சனி இதுவரை பெரும்பாலும் தீர்த்தவாரிக்கு எழுந்தருளுவதில்லை. இவர்களும் மேற்குநோக்கி நின்று அருள்பாலிக்கும் தன்மை உடையவர்கள்.) தனக்கு வருடத்தில் மூன்று முறை வணக்கம், அல்லது நன்றி கூறும் பொருட்டும், மேற்கு நோக்கி தீர்த்த பாலகர் அருள்பாலிக்கின்றார்.

ஸ்ரீ தீர்த்தபாலகர் ஈஸ்வரனின் அவதாரம். பைரவ குடும்பத்தைச் சார்ந்தவர். மகா பைரவர் முதலில் எட்டு அவதாரம் எடுக்கிறார். பிறகு இந்த எட்டு அவதாரமும் தேவைக்கேற்ப, ஒவ்வொரு அவதாரமும் எட்டாகப் பிரிந்து மொத்தம் 64 திருஉருவாக மக்களுக்கு அருள் பாலிக்கின்றார். ஸ்ரீ தீர்த்த பாலகர், இந்த 64 பைரவக் குடும்பத்தில் இல்லாமல், பைரவருக்கு இணையாக தனித்திருந்து உலகின் நீர் நிலைகளின் தலைமை நாயகனாக, உலகை வளம்பெறச் செய்யும் வலிமை உடையவராக இருக்கிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Halasyam Collection, Sholinganallur, Chennai

நல்ல மழையால் நாட்டில் விவசாயம் பெருகும். இதனால் பொருளாதாரம் சிறப்படையும். ஸ்ரீ தீர்த்தபாலகர் நிலத்தடி நீரைக் காப்பவர் என்பதால், அவர் காலடியில் இரு கலசத்திலிருந்து தண்ணீர் பூமிக்குள் செல்வது போலவும், நிலத்தின் மேல் நீர்வற்றாமல் காப்பவர் எனும் பொருளில் அவர் தோள்மீது இரு கலசத்திலிருந்து நீர் ஊற்றுவது போலவும். பெருமழைக் காலத்தில் பூமியைக் காப்பவர் என்பதால் ஒரு குடையும் கொண்டுள்ளபடியும் அமைந்துள்ளார்.

கடல் ஆழிப்பேரலையிலிருந்து பூமியைக் காப்பவர் என்று தெரிந்தும், இதுவரையும் ஸ்ரீ தீர்த்தபாலகருக்கு உலகில் எந்தப் பகுதியிலும் கோயிலோ, சிலையோ இல்லை. ஆகையால் முதன் முறையாக ஸ்ரீ தீர்த்தபாலகருக்கு திருவுருவம் கொடுத்து சிலை செய்துள்ளேன். பூமி குளிர்ச்சியாக இருந்தால் மக்களின் மனதில் குளிர்ச்சி (கருணை) ஏற்படும். இதனால் வன்முறை எழாது, பூமியும் வளம் பெறும், மக்கள் செல்வச் செழிப்பில் மிதப்பார்கள். இந்துமத போதனைகளை சரியான முறையில் கடைப்பிடித்தால் நாட்டில் தீய பிரச்சனைகள் எழாதவண்ணம் நாடு செழிப்படையும்.

மேலும் ஸ்ரீ தீர்த்தபாலகர் வழிபாடு பெருகினால் கடல் சீற்றமோ சுனாமி என்னும் ஆழிப்பேரலையோ கண்டிப்பாக வராது. இவ்வளவு காலமாக இல்லாமல் இருந்த ஸ்ரீ தீர்த்தபாலகர், சுனாமி என்னும் பீதி அதிகரிக்க ஆரம்பித்துள்ள இக்காலக் கட்டத்தில், தாமாகவே நேரிடையாக வர முடியாது என்பதால், சிறுவனாகிய என் மூலமாக உருவம் பெற்று உலகைக்காக்க வந்துள்ளார். இந்து மக்களின், **குறிப்பாக கடலோரத்தில் வாழும் மக்கள், தண்ணீரைப் பெரிதும் பயன்படுத்தும் விவசாயிகள்,** போன்றோர்க்கு ஸ்ரீ தீர்த்தபாலகர் மிகப் பெரிய விடிவெள்ளியாகத் திகழ்வார். இன்று சுனாமி என்று கூறப்படும், உலகை அழிக்கும் சக்தி படைத்த கடல் பேரலையைக் கட்டுப்படுத்துவதற்கான, தெய்வத்தை இந்து மதத்தில் மட்டுமே காண முடியும். இந்துமதத்தின் சிறப்புகளில் இதுவும் ஒன்று. பழமையை மறந்து இனி வரும் காலங்களில் கடல் சீற்றத்தால் மீண்டும் மக்கள் பேரிடருக்கு ஆளாகாமல் பாதுகாக்கும் ஸ்ரீ தீர்த்தபாலகரை மனதார வழிபட்டு தேவைக் கேற்ப மழையைப் பெறுவோம். மழையால் பூமி குளிர்ச்சி அடையும். மக்களின் மனதில் கருணை பிறக்கும். மேலும் மழையால் பூமி செழிக்கும், விவசாயம் பெருகும். பொருளாதாரத்தின் தலைவர் சொர்ணபைரவரின் அருளால் பொருளாதாரம் செழிக்கும். நாடு வளம் பெறும். ஒரு நாடு செல்வச் செழிப்பில் சிறந்து விளங்கினால், அண்டை நாட்டினாலும் அல்லது விரோதிகளினாலும், பல இன்னல்கள் ஏற்படும். அப்படி செழிப்புள்ள நாட்டிற்கு விரோதிகள் ஏற்படாமலிருக்க சிவ அம்சமான மகா பைரவர் பகைவர்களை வென்று நம்மைக்காக்கும் பொருட்டே, ஈசுவரன் இப்படி பல வடிவங்களைக் கொண்டு உலகைக் காக்கின்றார். எனவே நாடு நலம் பெறவும், இந்து மக்கள் வளம் பெறவும் ஸ்ரீ தீர்த்தபாலக ஸ்வர்ணாகர்ஷண மகாபைரவர் வழிபாடு மிக அவசியம். இம்மூவரும் ஈஸ்வரனின் மறு அவதாரங்கள் என்பதை மனதில் கொள்ளவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ தீர்த்தபாலகர் தண்ணீரின் தலைவர். தண்ணீரின்றி உயிர் வாழ்க்கை கிடையாது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஸ்ரீ தீர்த்தபாலகர், இப்புவிக்கு முதன் முறையாக புதுவையில் உருவம் பெற்று ஸ்தாபிதம் செய்யப்பட்ட நாள், சர்வதாரி ஆண்டு வைகாசி மாத வளர்பிறை ஆயில்ய நட்சத்திரம். எனவே இவரின் நட்சத்திரம் செல்வம் கொழிக்கும், தேவர்கள் புகழும் ஆயில்ய நட்சத்திரமே. இந்த நட்சத்திரம் கடக ராசிக்கு உரியதே. இந்த கடக ராசி நீருக்கும் நிலத்திற்கும் ஏற்ற ராசியாகும். நீரின் தலைவர் நீருக்குண்டான ஆயில்ய நட்சத்திரத்தில் உருவம் பெற்றது ஈசுவரனின் திரு விளையாடல்களில் இதுவும் ஒன்று.

இவருக்கு ஏற்ற சிறப்பு நாட்கள் :

1. வருடத்தில் வைகாசி மாத வளர்பிறையில் வரும் ஆயில்ய நட்சத்திரம்.
2. ஒவ்வொரு மாத ஆயில்ய நட்சத்திரம்.
3. மாத பௌர்ணமி இரவு.
4. திங்கட் கிழமை இரவு.

இவருக்கு ஏற்ற படையல் :

வெண்பொங்கல் - வெண் சக்கரைப் பொங்கல் - அரிசிப் புட்டு - வெள்ளைக் கொண்டைக் கடலை சுண்டல் - பால் பாயாசம் - தேன் கலந்த பால் - இனிப்புடன்கூடிய அவல் - உளுந்து வடை ஆகியவை.

இவருக்கு ஏற்ற சாற்றுப்படி பொருள்கள் :

வாசமுள்ள மலர் மாலைகள் - அன்று பூத்த அல்லி மலர் - வெற்றிலை மாலை - எலுமிச்சைப் பழ மாலை 108-54-27 என்ற எண்ணிக்கையில் இருப்பது சிறந்த பலனைத் தரும்.

வெள்ளை வெண்பட்டு ஆடைகளால் ஸ்ரீ தீர்த்தபாலகரை அலங்கரித்து, குடுமி நீக்கிய இரண்டு தேங்காய் மூடியில் நெய் தீபம் அல்லது வெள்ளை பூசணியை சமபாகமாக குறுக்கு வாட்டில் இரண்டாக வெட்டி விதைகளை நீக்கி நெய் தீபம் ஏற்றினால் குறுகிய காலத்தில் வீட்டில் பகைநீங்கி அமைதியும் நன்மையும் பெருகும். வாழ்க்கையில் வளமும் நலமும் வெற்றியும் பெருகும். மனித நேயம் வளரும். ஸ்ரீ தீர்த்தபாலகரின் திருவருள் இல்லத்தில் பெருகும்.

தேங்கி நிற்கும் நீரிலும், ஓடும் நீரிலும், சீறிப்பாயும் கடல் அலைகளிலும் ஸ்ரீ தீர்த்தபாலகர் வீற்றிருப்பதால், தண்ணீரே இவருக்கு வாகனமாக அமைந்துள்ளது. நீர் இருக்கும் இடத்தில் ஸ்ரீ தீர்த்தபாலகர் இருப்பார், ஸ்ரீ தீர்த்தபாலகர் இருக்குமிடத்தில் மங்களம் நிறைந்திருக்கும்.

சிதறும் சைவ (ஆன்மீகம்) மதம்

இந்து என்றால் நிலவு. இந்துஸ்தான் என்றால் நிலவின் ஆதிக்கம் பெற்ற பூமியின் ஒரு பகுதி என்று பொருள். இந்த இந்துஸ்தானத்தில் உதயமானதால் இது இந்து மதம் என்று பெயர் பெற்றது. இந்து மதத்தின் ஆணிவேராகத் திகழும் பெரும் சக்தியை, சர்வ ஈஸ்வரன் என்று அழைக்கின்றோம். சர்வம் என்றால், அளவிட்டு விவரித்துக் கூறமுடியாத பிரபஞ்சத்தின் அளவு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இப்பிரபஞ்சத்தில் எண்ணிலடங்காத சூரியக் குடும்பங்கள் உள்ளன. ஒரு சூரிய மண்டலத்திற்கும் இன்னொரு சூரிய மண்டலத்திற்கும் இடைப்பட்ட தூரம் பல லட்சம் ஒளி வருடம் என்று விஞ்ஞானிகள் கூறி உள்ளனர். இவ்வளவு எண்ணிக்கை நிறைந்த சூரியக் குடும்பங்களைக் கட்டிக் காக்கும் கற்பனைக்கு எட்டாத ஒரு மாபெரும் சக்தியை சில விதண்டாவாதிகள் ஆன்மீக வாதிகளைப் பார்த்து கேட்கும் முதல் கேள்வி? அதிலும் இந்து மதத்தினர்களை மட்டுமே, நீ கடவுளைப் பார்த்ததுண்டா என்று கேட்கிறார்கள். தன் முதுகையே தன்னால் காண முடியாத போது கற்பனைக்குக் கூட எட்டமுடியாத பிரபஞ்ச நாயகனைக் கண்டாயா? என்று கேட்பார்கள். ஆனால் தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அனைத்து மத பிரசாதங்களையும் ஏற்றுக் கொள்வார்கள்.

கடவுள் மிகப் பெரியவர் நமது சிறிய ஆறு அடி உயர உடலுக்குள் இருந்துக் கொண்டு மனிதனை ஆட்டிப் படைக்கும் உயிர் என்ற ஒன்றைப் பார்க்கவே நமக்கு அருகதை இல்லாத போது, ஆண்டவனை பார்த்ததுண்டா என்ற கேள்வியைத் தவறாமல் கேட்கிறார்கள் சிலர். அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் ஒரு மலை உச்சியில் சிவலிங்கம் ஒன்றை சுமார் 5 வருடங்களுக்கு முன் கண்டு பிடித்துள்ளனர் (இது தமிழ் பத்திரிக்கைகளிலும் வெளிவந்துள்ளது) அந்த சிவலிங்கம் சுமார் 10 ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்ததாக அந்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். ஆனால் நமது இந்து மதப்பெரியவர்கள் இதைப் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை. எப்படி அங்கே சிவலிங்கம்? 10 ஆயிரம் வருடங்களுக்கு முன் இந்து மதம் எங்கே தோன்றியது? அந்த நாட்டு மலை மீது எப்படி சிவலிங்கம் வந்தது? என்பதை சிந்திக்க இந்து மதப் பெரியவர்கள் முன் வரவேண்டும். சமயம் தழைக்கவேண்டும்.

சைவ, வைணவ கோயில் சுவற்றில் வண்ணம் பூசுதல்

ஆரம்பத்தில் இந்து மதம் இரு பிரிவுகளாக்கப்பட்டது. அது சைவம் என்றும் - வைணவம் என்றும் அழைக்கப்படுகிறது. சைவர்களின் விதி முறைகளுக்கும், வைணவர்களின் விதி முறைகளுக்கும் சில மாற்றங்கள் உண்டு. சைவ, வைணவ ஸ்தலங்களை வெகு தொலைவிலிருந்து பார்த்தே இது சைவ ஸ்தலம் என்றும், வைணவ ஸ்தலம் என்றும் கண்டுபிடிக்கக் கூடிய வகையில் கோயிலின் வெளிச்சுற்று மதில்களிலும் - உள் சுற்று மதில்களிலும் வண்ணம் பூசுவார்கள். இந்த வண்ணம் பூசும் முறையை இன்றளவும் வைணவர்கள் முறைப்படி கடைப்பிடித்து வருகிறார்கள். அதாவது காவி மற்றும் வெள்ளை நிறத்தை மேலிருந்து கீழாக பூசுகிறார்கள்.

ஆனால் சைவக் கோயில்களில் மதில் சுவர்களுக்கு வெளியேயும் உள்ளேயும், தரைக்கு இணையாக நீள வாட்டத்தில் வண்ணம் பூச வேண்டியவர்கள், சைவ சிந்தனையை மறந்து போய், வைணவக் கோயிலில் பூசுவதைப் போன்றே வண்ணம் பூசுகிறார்கள். இந்நிலை சாதாரணக் கோயில்களில் மட்டும் இல்லை. **திருச்செந்தூர் முதல் பழநி கோயில் வரை இந்தத்தவறு நடைபெறுகிறது.** சைவக் கோயில்களில் நீளவாக்கில் படுக்கையாக காவி மற்றும் வெள்ளை வண்ணத்தை உடனடியாக மீண்டும் முறைப்படி பூசி சைவ சித்தாந்தத்தை உயிர் பெறச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செய்ய வேண்டும். இது நாள் வரை செய்து வந்தத் தவறைச் சரி செய்து சைவத் தலங்களை சிறப்படையச் செய்வதே சிறந்த சைவத் தொண்டாகும். காவி நிறம், வெள்ளை நிறம் / காவி நிறம், வெள்ளை நிறம் / காவி நிறம். மீதமுள்ள சுவர் முழுவதும் வெள்ளை நிறம் பூச வேண்டும். வேத விற்பன்னர்கள் சமய ஆன்றோர்கள் - மகா சந்நிதானங்கள் ஆலய அறங்காவலர்கள் மனம் வைத்தால் தமிழகத்தில் உள்ள அனைத்து சைவக் கோயில்களிலும், முறைப்படி வண்ணத்தை மாற்றி புத்துணர்வு அடையச் செய்யமுடியும். காலப்போக்கில் சுவற்றிற்கு நாமம் போட்டதுபோல், ஈசுவரனுக்கும் எதிர்காலத்தில் நாமம் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



சைவக்கோயிலின் சுவற்றில் வண்ணம் பூச- வேண்டிய முறை



வைணவக் கோயிலின் சுவற்றில் வண்ணம் பூச- வேண்டிய முறை

சிவனுக்கு, தன் வாழ்வின் ஒரு பகுதியை பயனுள்ளதாக்கிக் கொள்ளும் உழவாரத் தொண்டு புரியும் சிவனேசச் செல்வர்களே, துப்புரவு மட்டுமல்லாது சைவக்கோயில்களின் மேன்மை தழைக்க சுவற்றில் சைவ முறைப்படி வண்ணம் பூசுவதும் மிகச்சிறந்த உழவாரப்பணி என ஏற்று இதில் கவனம் செலுத்தி ஈசனின் அருளைப் பெற்றுய்ய வேண்டுகிறேன்.

ஆனந் என்பவரை, ஆனந் என்று கூப்பிட்டால் மட்டுமே, **ஆனந்** ஏன் என்று கேட்பார். ஆனந் என்பவரை **அஷோக்** என்று கூப்பிட்டால், ஆனந் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார். இதைப் போலவே பெரும்பாலான சைவக் கோயில்களில் முக்கிய நேரங்களில் கோவிந்தா - கோவிந்தா என்று கோஷமிடுகிறார்கள். இது முறையல்ல. பாமர மக்கள் அறியாமையால் செய்யும் இந்த தவறை, கோவிலில் இருக்கும் ஆன்றோர்கள் திருத்துவது நல்லது. வைணவத் தலங்களில் அரோஹரா என்று கோஷம் போடுவார்களா என்றால், போட மாட்டார்கள் . கோவிந்தனை கோவிந்தா என்றும், சிவனை அரோஹரா என்றும் கோஷம் போடுவதே மிகவும் சிறப்பு. சில சமயக் கட்டுப்பாடுகள் மிகவும் முக்கியம். சைவமும், வைணவமும் இந்து மக்களின் இரு கண்களைப் போன்றது. இதில் எது உயர்ந்தது என்ற கேள்விக்கே இடமில்லை.

ஹரியும் சிவனும் ஒண்ணு, அறியாதார் வாயில் மண்ணு என்ற பெரியோர் வாக்கும் மிகச் சிறந்ததே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

கோபுரக் கலசங்களின் பரிதாப நிலை

விண்ணிற்கும், கோபுரக் கலசத்திற்கும் இடையில் எதுவும் இருக்கக் கூடாது. காரணம் விண்ணில் உள்ள இயற்கைச் சக்தி கோபுரக் கலசத்தின் வழியாக கோயிலுக்குள் வருவதாக ஐதீகம். முதலாவதாக கோபுரக் கலசத்திற்குள் இறங்கும் இயற்கை சக்திக்கு இடையில், ஏதாவது தடுப்பு இருக்குமானால், இயற்கைச் சக்திக்கு ஓர் தடை ஏற்பட்டு விடுகிறது.

கோயிலின், முக்கியமான பாதுகாவலரே கோபுரக்கலசம் தான். அனைத்து கோபுரத்தின் மீதும் செப்பு உலோகத்தால் ஆன கலசங்களைச் செய்து கருவறை மற்றும், பிரதான சாமிகளுக்காகக் கட்டப்படும் கோபுரத்தின் மீதும், ராஜகோபுரங்கள் மீதும், அமைப்பார்கள். கலசங்களின் உயரம், பருமன் கோபுர உயரத்தையும் வசதியையும் பொறுத்தது. கலசம் விண்ணிற்கும், மண்ணிற்கும் உள்ள தொடர்புக்கு ஒரு பாலம் போன்றது. கலசத்தை கோபுரத்தின் மீது அமைப்பதற்கு முன், அதற்குள் சிறந்த தன்மையுடைய வரகு என்ற தானியத்தை நிரப்புவார்கள்.

கலசத்திற்குள் ஏன் இந்த வரகு. வரகுக்கு மின் ஈர்ப்பு சக்தி அதிகம். ஆகையினால் கலசத்திற்குள் வரகு என்ற தானியத்தை நிரப்புகிறார்கள். வரகுடன்கூடிய கலசம் கோபுரத்திற்கு ஒரு இடிதாங்கியாகத் திகழ்கிறது. முற்காலங்களில் வீடுகளைவிட, பெரிய வியாபார கட்டிடங்களைவிட, மிகவும் உயரமாக இருந்தது கோயில் கோபுரங்கள். விண்ணில் ஏற்படும் சீற்றங்களினால் கோபுரம் எளிதில் சேதமடைகிறது. (உதாரணம் : சில வருடங்களுக்குமுன்பு சிதம்பரக் கோபுரத்தை இடி தாக்கி சேதமடைந்ததும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உடைப்பு ஏற்பட்டதும் நினைவில் கொள்ளத்தக்கது) இடி சத்தத்துடன், மின்காந்தசக்தி வெளிப்படுகிறது. இந்த மின்காந்த சக்தியை தன்னகத்தே ஈர்த்துக் கொள்ளும் தன்மை, வரகுக்கு உள்ளது. இப்படி 12 வருடங்களுக்கு இடியிலிருந்து கோயிலைக் காப்பாற்றும் சக்தி பெற்றது இந்த வரகு என்ற தானியம். சூரிய உஷ்ணத்தினால் சிறுக சிறுக தன் வலிமையை இழக்கும் இந்த வரகு, 12 வருடத்தில் முழுமையுமாக தன்வலிமையை இழந்து விடுகிறது. ஆகையினால் தான் கோயிலுக்கு 12 வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு செய்கிறார்கள். இது பழைய சம்பிரதாயம்.

ஆனால் இன்று நாகரீகத்தின் பெயரால் கோபுர கலசத்திற்கு மேல் ஒரு மின் விளக்கை அமைத்து விடுகிறார்கள். நல்ல தரமான வரகு சூரிய உஷ்ணத்தினால் பகல் பொழுதில் தன் சக்தியை இழந்தும், இரவு பொழுதில் ஏற்படும் குளிர்ச்சியினால் மீண்டும் தன் சக்தியை இழக்காமல், குளிர்ச்சி அடைகிறது. இப்படி இரவு நேரத்தில் குளிர்ச்சியைப் பெற்று தன் வாழ் நாளை 12 வருடங்களுக்கு பாதுகாத்துக் கொண்டிருந்ததை, இந்த மின்விளக்கின் உஷ்ணத்தினால் கலசத்திற்குள் இருக்கும் வரகிற்கு, இரவிலும் குளிர்ச்சி அடைய வழி இல்லாமல் செய்து விட்டனர். இதனால் பகலில் சூரிய வெப்பத்தினாலும், இரவில் மின்விளக்கு உஷ்ணத்தினாலும் வரகு, தன் சக்தியை ஓரிரு ஆண்டில் தன் வாழ்நாளை கோவிலைக் காக்கும் கடமையில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
இருந்து, தன்னை அழித்துக் கொள்கிறது. சமீப காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மெழுகு, ஒளி தருவதற்காக, தன்னைத் தானே அழித்துக் கொள்வதாகக் கூறுகிறார்கள். ஆனால் காலம் காலமாக, விளம்பரமே இல்லாமல் தன்னைத் தானே உஷ்ணத்திற்குப் பலியாக்கிக் கொண்டு கோயிலையும் அதைச் சுற்றி உள்ள ஊர்களையும் காக்கும் வரகு என்ற தானியத்தின் பெருமையை யாரும் நினைவில் கொள்ளவில்லை என்பது வருத்தத்திற்குரியது. மின் விளக்கை கோபுர கலசத்திற்கு மேல் அமைக்க விரும்பினால் குடமுழுக்கு காலத்தையும் வெகுவாகக் குறைத்து, ஆறு ஆண்டிற்கு ஒரு முறை அவசியம் குடமுழுக்கு செய்வது சாலச்சிறந்தது. இதனால் இந்துமதமும், இந்து கோயில்களும், இந்து மக்களுக்கு சிறந்த அரணாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

சூரிய மறைவிற்குப் பிறகு, அரச மரத்தை தரிசிப்பது சரியல்ல, என்பதைப் போல் சூரிய மறைவிற்குப் பிறகு, கோபுரக் கலசத்தை தரிசிப்பதும் சரியானது அல்ல என்பது பழமை. ஆகவே கலசத்தைப் பார்ப்பதற்காக கோபுரத்தின் மீது மின்விளக்கை அமைப்பதால், பல புனிதங்கள் பாழாய்ப் போகிறது. அந்தமின் விளக்கு பழுதாகும்போது எலக்டிரிஷியன் கோபுரத்தின்மீதேறி விளக்கை பழுதுபார்க்க வேண்டி உள்ளது. (பழுதுபார்க்கக் கோபுரத்தின் மீதேறுபவர் இந்துவாகத்தான் இருப்பார் என்று கூறமுடியாது.) அப்படி செல்பவர் அந்தமின் விளக்கை சரி செய்யும்போது தெரிந்தோ தெரியாமலோ கலசத்தின் மீது கால் வைத்தே பழுதுபார்க்க நேரிடும். இது இயல்பு. அப்படி கால்படும் கலசத்திற்கு என்ன புனிதம் இருக்கும் என்று புரியவில்லை!. ஆகாயத்திற்கும், கோயில் கோபுரக் கலசத்திற்கும் நடுவில் எதுவும் இருக்கக்கூடாது என்ற போது, கலசத்திற்கு மேல் மின் விளக்கை அமைப்பது, இந்து மத (விதிகளுக்கு) காரண காரியங்களுக்கு எதிரானது. என்பதைப் பற்றி இந்துக்கள் யாரும் கவலைப்படுவதாக இல்லை. மற்ற மதத்தினர், கோயில் கோபுரத்தின் மீது கலசம் வைப்பதில்லை. வைத்தாலும் அதற்குள் வெற்றிடம் கிடையாது. அப்படியே வெற்றிடம் இருந்தாலும், அதற்குள் வரகு என்ற தானியத்தை நிரப்புவதில்லை. மேலும் 12 வருடத்திற்கு ஒரு முறை கலசத்திற்கு (கும்பத்திற்கு) அவர்கள் கும்பாபிஷேகம் செய்வதும் இல்லை. அவர்கள் கோபுரத்திற்குமேல் மின்விளக்கு அமைப்பதால் தவறொன்றும் இல்லை. நம் கோபுரக் கலசத்தை மக்கள் பார்த்தே ஆக வேண்டும் என்று சான்றோர்கள் நினைத்தால், அதிக வெப்பம் இல்லாத மின் விளக்கை, கலசத்தின் மீது வெளிச்சம் படும் அளவிற்கு, கலசத்திற்குக் கீழே, கோபுரத்தின் விளிம்பில் அமைப்பதே சாலச்சிறந்ததாகும். மின் விளக்கில் பழுது ஏற்பட்டாலும், பழுதை சரி செய்யச் செல்பவரின் கால் கலசத்தின் மீது பட வாய்ப்பில்லை. அதனால் கலசத்தின் புனிதத்தன்மையும் கெட வாய்ப்பில்லை. இந்துமதப் பெருமையும் காக்கப்படும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihara Sarma, Sholinganallur, Chennai

மூலதோ ப்ரம ரூபாய மத்தியதே விஷ்ணு ரூபினே
அக்ரதச் சிவரூபாய வ்ருக்ஷராஜாயதே நம:

இந்த சுலோகம் அரச மரத்திற்கு மட்டுமே பொருத்தமானது. ஆனால் இந்த ஸ்லோகத்தை சிவலிங்கத்திற்குப் பயன்படுத்தி அர்த்தத்தை அனர்த்தமாக்கி விட்டார்கள். சிவலிங்கத்தை மூன்று பாகமாகப் பிரித்து, அரச மரத்தின் மூன்று பாகங்களுக்கு ஒப்பிட்டுத் தவறாகக் கூறி வருகிறார்கள். அரசமரத்தின் சுலோகம் வேறு மரங்களுக்குப் பொருந்தாது. அரச மரம் தெய்வீக சக்தி பெற்ற மரம். அதனால்தான், மரங்களுக்கெல்லாம் அரசனாக விளங்குகிறது. மேலும் மற்ற மரத்தின் இலைகளை கசக்கிப் பிழிந்தால், அதிலிருந்து சாறு வரும்(ரசம்) அரசமர இலைகளைக் கசக்கிப் பிழிந்தால் சாறு (ரசம்) வராது. (அ+ரசம்+மரம்=அரசமரம். ரசமில்லாத மரம்) அரச இலைகளில் மின்காந்த சக்தி இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இக்காரணங்களினாலேயே அரசஇலையில் சாறு இருப்பதில்லை. இந்த அரசமரத்தில் மட்டுமே மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு, பிரம்மா என மூவரும் இணைந்து வாசம் செய்கிறார்கள். காரணம் அரசமரத்தில் மட்டுமே, மரத்தின் நீள வாட்டத்தில் (கீழிருந்து மேலாக) மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

பிரம்மா மரத்தின் மையப்பகுதியில் இருக்கின்றார். இந்த மையப்பகுதி ஒரு தண்டுபோன்ற வடிவில் மறைந்துள்ளது. இந்த மையப் பகுதியின் வழியாகவே மரத்திற்கு வேண்டிய சத்துணவை நீராகக் கொண்டுச் செல்லப்படுகிறது. இந்த மையப் பகுதியே மரத்திற்கு உயிர் கொடுக்கும் (*மூலதோ பிரம்ம ரூபாய*) மூலம் என்று பொருள்படுகிறது.

இந்த மையப் பகுதியை சுற்றிலும் உள்ள தசைப் போன்ற பகுதி (*மத்தியதே விஷ்ணு ரூபினே*) உள்ளது, இந்த மரத்தின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துநீரைக் கொண்டு செல்லும் மையப் பகுதியை இது பாதுகாக்கிறது. எனவே இதை விஷ்ணு பகுதி என்றும் மேற்படி சுலோகத்தின் மூலம் தெரியவருகிறது.

அரச மரத்தின் மத்தியப் பகுதியையும், அதைப் பாதுகாக்கும் தசைப் பகுதியையும், இவை இரண்டையும் பாதுகாக்கும் மேல்பகுதி, நம் பார்வைக்குத் தெரியும் மரத்தின் புறப்பகுதியை (*சிவரூபமாக, அக்ரதச் சிவரூபாய*) சிவ பகுதி என்று மேற்படி சுலோகம் விளக்குகிறது. எனவே மும்மூர்த்தி அம்சமான (சிவ, விஷ்ணு, பிரம்மாவை) நீளவாக்கில் தனித்தனியாக பிரிக்க இயலாது. காரணம் தண்ணீரைக் கொண்டு செல்லும் பகுதி, ஆணிவேர் முதற்கொண்டு உச்சியிலுள்ள குருத்துவரை அமைந்துள்ளது. இதைப்போலவே தண்ணீரைக் கொண்டு செல்லும் பகுதியை, சுற்றிலுமுள்ள தசைபோன்ற பகுதியும், ஆணிவேர் முதற்கொண்டு உச்சியிலுள்ள குருத்து வரை அமைந்துள்ளது. இது போன்றே ஆணி வேரில் ஆரம்பித்து குருத்து வரை அரச மரத்தின் இந்த இரு பகுதிகளையும் கட்டிக் காக்கும் புறப்பகுதியும் ஒரு போர்வையாக அமைந்துள்ளது. இப்படி ஒன்றுக்குள் ஒன்று, மறைந்திருப்பதால் இவற்றைத் தனித்தனியாகப் பிரிக்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



மேலே கூறப்பட்ட
ஸ்லோகத்தின் படி
அரச மரத்தை பிரிக்கும் தத்துவம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிரான்ஸ் நாட்டு (பாரீஸ்) தியாகிகள் நினைவிடத்தில்
ராணுவ தளபதிகளுடன் வருகை பதிவேட்டில் கையெழுத்திடுதல். (13-07-1987)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
முடியாதபடி அமைந்துள்ளது அரச மரம். அரச மரத்தின் படத்தில் இம்மூன்று பகுதிகளையும் ஆணிவேர் முதல், உச்சியிலுள்ள குருத்து வரை வண்ணம் தீட்டிக் காட்ட முடியாமைக்கு வருந்துகிறேன்.

ஆனால் அரச மரத்தின் வேர்ப் பகுதி மூலம் (பிரம்மா) என்றும், வேர்ப் பகுதிக்கு மேலுள்ள பகுதி மத்யதே (விஷ்ணு) என்றும், கிளைப்பகுதியை அக்ரதச் (சிவன்) என்றும் விளக்கினால் எல்லா மரங்களிலும் இந்த மூன்று பாகங்களும் உள்ளன. இந்த மூன்று பாகங்களையும் தனித்தனியாக வெட்டிப் பிரித்துவிட முடியும். அப்படி மூன்று பாகங்களையும் தனித்தனியாகப் பிரிப்பதால், மும் மூர்த்திகளையும் தனித்தனியாகப் பிரித்துவிட முடியும்.

மரங்களில் சிறந்த அரச மரத்தின் பெருமை உலகளாவியது. இதன் சக்தி மிகவும் உயர்வானது. இது ஞானத்தைத் தரும் என்பதால் போதி விருட்சம் என்றும் அழைக்கப்படுகிறது. புராணங்களில் அரச மரத்தை மும் மூர்த்திகளின் வடிவமாக போற்றுகின்றனர். இந்த மரத்தில் மட்டுமே (ப்ரம்மன்- விஷ்ணு- சிவன்) உயிர் கொடுக்கும் ப்ரம்மன் - உயிரைக் காக்கும் உடலுக்குள் உள்ள தசைப் பகுதியைப் போன்ற மரத்தின் அடர்த்தியான பகுதியை விஷ்ணு பாகம் என்றும், இவை இரண்டையும் கட்டிக் காக்கும் மரத்தின் புறப்பகுதியான பட்டைப் பகுதியை சிவன் பகுதி என்றும் இவை மூன்றும், ஆணிவேர் முதற்கொண்டு உச்சியில் உள்ள குருத்து வரை பிரியாமல், பிரிக்கக் கூடாத வகையில் அமைந்துள்ளது. மரத்தின் வேர் ப்ரம்மப் பகுதி, மரத்தின் வேர்ப் பகுதிக்கு மேல், கிளைகள் உள்ள பகுதிக்குக் கீழே உள்ளது விஷ்ணு பகுதி என்றும், கிளைகளும் இலைகளும் சிவன் பகுதி என்று சிலர் கூறுவது ஸ்லோகத்தின் சரியான விளக்கம் இல்லை. அரச மரத்தின் புறப்பகுதி அல்லது மேல் பகுதி சிவன் பகுதி என்பதால் தான் சக்தி அம்சமாக கருதப்படும் வேப்பமரம், அரச மரத்தின் வேர்ப் பகுதியின், மேல் பகுதி முதல், அரச மரத்தின் குருத்துப் பகுதி வரை, பின்னிப் பிணைந்துள்ளது. இது சிவனுக்கும் சக்திக்கும் உள்ள உறவை உறுதி செய்கிறது.

மேற்படி சுலோகத்தின் பொருள், மும்மூர்த்திகளையும் பிரிக்கக்கூடாத; பிரிக்க முடியாதபடி அமைந்துள்ளது. அரச மரத்தின் எந்தப் பகுதியை வெட்டினாலும் அல்லது ஒரு இலையைப் பறித்தாலும்கூட அதற்குள் மும்மூர்த்திகளும் ஒன்றாகவே இருப்பார்கள். இப்படி மூன்று பகுதிகளும் அமைந்த ஒரே மரம் அரசமரம் மட்டுமே.

எனவே வேதாந்திகள் மேற்கண்ட சுலோகத்தின் உண்மைத் தத்துவத்தை மேலும் சிறப்பாக எளிய முறையில் பாமர மக்களுக்கு எடுத்துரைக்க முன்வரவேண்டும்.

சூரிய உதயத்திற்கு முன்பும், சூரிய மறைவிற்குப் பிறகும் அரச மரத்தை வலம் வருதல் நன்மை தராது. (கண்டிப்பாக வலம் வருதல் கூடாது)

சூரிய உதயத்திற்குப் பிறகும் சூரிய மறைவிற்கு முன்பும் அரசமரத்தை வலம் வந்தால் விரும்பியதை விரும்பியவாறே கொடுக்கும் சக்தி வாய்ந்தது அரசமரம். இதை நடைமுறையில் அனைவரும் உணரலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

SHREE THEERTHABALAGAR

For the first time, Puducherry (Shri. COLBERT ZEABLANE @ Jayabalan) gifts Shree. "THEERTHABALAGAR", to the world.

Introduction:

Having read about the divine diety, "Theerthabalagar", in Thiruvavaduthurai Aadhinam Publication on Lord Bhairava Worship, I wanted to have a darshan of him. I undertook pilgrimage to various temples for this purpose, but was not successful in locating Shree Theerthabalagar. Hence atlast I decided to carve a statue for Sree Theerthabalar as described in the above mentioned Aadinam publication. For the first time in the world a stone statue of Shree Theerthabalagar was made, of a size optimum for worshiping. The statue was installed in a small temple built in my residence, ZEACODY @ JAYACODY, Home, Raja Nagar, Puducherry on my sixtieth birthday (complete), the Sunday, 8th June, 2008. On this day in the early morning at 5 A.M. the consecration of the temple in my residence was carried out by devotees of Lord Shiva as per Tamil veda procedures. The presiding diety of this temple is "Divine Theerthabalaka Swarnakarshana maha Bhairavar".

Shree Theerthabalagar

In the ancient scriptures he is described as the God for water resources and protector of the world from tsunami. He is the protector of ground water. He protects the rivers, lakes and ponds from drying. Further in rainy season he protects this earth from floods.

All the Hindu deities take a holy dip in the sea thrice in a year called theerthawari Shree Theerthabalagar is the chief for this function. All the Hindu Gods visit water bodies such as sea, rivers & lakes during the new moon days in the tamil months of Thai & Aadi and on the star "Magam" day in the tamil month of Maasi in order to pay their salutations to Shree Theerthabalagar. One year of human calendar is equal to one day of Gods. The period in between the new moon of tamil months Thai & Aadi is considered as the day time for Gods. Similarly the period in between the new moon days of Tamil months Aadi & Thai is the night for Gods. Hence it is believed that all Gods visit water bodies in the new moon day of Thai to have their morning bath & in the new moon day of Aadi to have their

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

evening bath. All the Gods coming for "Theerthawari" stand east facing where as Sri. Theerthabalagar stands west facing to prevent the sea from entering the place of living of humans. He also stands west facing to express his gratidute to the Gods who visit him thrice in a year. (mostly the Gods Bhairavar & Sani do not take part in this Theerthawari). Shree Theerthabalagar is the incarnation of Lord shiva. He belongs to the Bhairava family. The Maha Bhairavar initially takes eight incarnations. Later, on need based, these eight incarnations are divided into sub classes totalling to 64 figures showering the divine grace on his devotees.

Shree Theerthabalagar does not belong to this 64 members of Bhairava family. He stands alone equivalent to Bhairava protecting the water resources in this world and having the power to make this world prosper.

The physical appearance of Shree Theerthabalagar :

Optimum rainfall flourishes agriculture which in turn boosts our economy. As Shree Theerthabalagar is the protector of ground water he has two kalasas pouring water into earth at his feet. As he prevents the drying up to surface water he has two khalasas pouring water over his shoulders in symbolic representation. As he is the one who saves this world from floods he has an umbrella.

The end note:

In spite of knowing that Shree Theerthabalagar protects our earth from Tsunami as on date there is no temple nor statue. For the first time his figure has been configured and a statue has been made. Only if the earth is cool the people will have love in their hearts. Then there won't be violence. The earth would prosper. People will become wealthy. If the Hindu religious codes are followed there won't be evil deeds in this earth and there will be prosperity without fail. On worshiping Shree Theerthabalagar the urbulence in the sea, Tsunami will never recur. In these days when the fear of Tsunami is prevalent as Shree Theerthabalagar cannot come on his own he has taken shape through a human for the first time. Hindus especially people dwelling on the sea shore, people who use water predominantly such as Agriculturist will be greatly benefited by Shree Theerthabalagar. The God for controlling Tsunami is available only in the ancient Hindu religion. We shall forget the past, worship Shree Theerthabalagar whole heartedly and live fearless of Tsunami and receive optimum rain.

www.shreetheerthabalagar.com

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Former Judge Shri. S. Murugaboobathi conferring the award of "Aanmeega Rathnaa" on Shri. Cobert Jeybalan on 23rd December, 2007.

108 என்ற எண்ணிக்கையின் விளக்கம்

இந்து மத ஞானியர்கள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே உட்கார்ந்த இடத்திலிருந்தே சூரியன், பூமியைவிட 108 மடங்கு பெரியது என்று கணித்திருக்கிறார்கள். இந்த உண்மையை இன்றைய விஞ்ஞானிகள் தற்போதுதான் கண்டுபிடித்துள்ளனர்.

இதைக் கருத்தில் கொண்டே சூரியனுக்கு வணக்கம் கூறும் வகையில் மந்திரங்களை 108ஆகக் கூறி போற்றுகின்றனர். இந்து மதத்தின் காரண காரியங்கள் ஒவ்வொன்றும் விஞ்ஞான ரீதியாகவே அமைந்துள்ளது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அனைவரும் நன்மைபெற எனது தாழ்மையான வேண்டுகோள்

பூஜை அல்லது மங்கள காரியம் ஒன்றை ஆரம்பிக்கும் முன் :

1. வீட்டில் (வீட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் பூசை குங்குமம் இட்டு) நம் முன்னோர்களை நினைத்து வழிபட வேண்டும். குறிப்பாக தாய் தந்தையை இழந்தவர்கள், அவசியம் பெற்றோர்களை முதன் முதலில் வழிபடவேண்டும். (அமாவாசைப் படையல் என்பது வேறு) பெற்றோர்கள் இருந்தபோது மனவருத்தங்கள் ஏற்பட்டிருக்கலாம். இது விதியின் வலிமை. ஆனால் பெற்றோர்கள் இறந்த பிறகு அவர்களே நமக்கு முதல் கடவுளாகுகிறார்கள். எனவே காரியசித்தி பெற அவர்களைத் தொழ வேண்டும்.
2. குலதெய்வ வழிபாடு என்பது, நம் சந்ததியினர்கள் தொடர்ச்சியாக கும்பிட்டு வந்த வழக்கமான முறை. இந்தக் குலதெய்வ வழிபாடு, நாம் வசிக்கும் இடத்திலோ அல்லது வசிக்கும் கிராமத்திலோ அல்லது நம்முன்னோர்கள் வாழ்ந்த ஊரிலோ இருக்கலாம். இந்த குலதெய்வ வழிபாட்டைச் செய்ய வேண்டும்.
3. வீட்டிற்கு அருகில் இருக்கும் திருக்கோயில் வழிபாடு. இது கிராம தேவதை வழிபாடு எனப்படுகிறது. இந்த கிராமதேவதை வழிபாட்டையும் செய்ய வேண்டும்.
4. இஷ்ட தெய்வ வழிபாடு என்பது, ஒவ்வொருவருக்கும் பிடித்தமான தெய்வத்தை வழிபடுவதாகும். இந்த வழிபாட்டையும் செய்ய வேண்டும். இதன் பிறகு நம் காரியம் சித்தியடைய கணபதி பூஜை முதற்கொண்டு, மற்ற பூஜைகளை அல்லது ஹோமங்களைச் செய்தால் குறையின்றி நம் வேண்டுதல் பூர்த்தியாகும்.

திருக்கோயிலுக்குச் சென்று வழிபடும் முறை :

1. உள்ளம் சுத்தமாக இருக்க வேண்டும்.

(வைணவ கோயிலாக இருந்தால் கோவிந்தா கோவிந்தா என்றும், சைவக் கோயிலாக இருந்தால் சிவ சிவா என்றும் கூறி போற்ற வேண்டும்.)

2. உடல் சுத்தம்,
3. உடை சுத்தம்,

தூரத்திலிருந்தே கோபுர கலசத்தை வணங்க வேண்டும்

வணங்குமுன், கால் மிதியடியை நீக்க வேண்டும்.

கோபுரவாசலை மிதிக்கும்முன், முன்படியை 2 கைகளினாலும் தொட்டு வணங்கவேண்டும். மிதியடியோடு கோபுர வாசலைக் கடக்கக் கூடாது. கோபுர வாசலில் தண்ணீர் குழாய் இல்லா விட்டால் நேராக கோயில் தீர்த்தக் குளத்திற்குச் சென்று, நீரில் காலை வைக்குமுன், நீரை வணங்கி இரு கைகளினாலும் நீரை எடுத்து தலையில் தெளித்துக் கொண்டு, பிறகு நீரில் இறங்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் சுவாமி தரிசனத்திற்குப் பிறகு குளத்திற்குச் சென்று கால்களைக் கழுவுதல் கூடாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுவாமி தரிசனத்திற்கு முன்பே பிச்சைக்காரர்களுக்கான தர்மத்தையும், கோயில் உண்டியல் காணிக்கையையும் செலுத்துவதே நன்மை தரும். சுவாமி தரிசனத்திற்கு பிறகு பிச்சைக் கொடுப்பதும், உண்டியலில் காணிக்கை செலுத்துவதும், சுவாமியிடம் நாம் பெற்ற அருளை தானம் செய்வதுபோல் ஆகி விடும்.

அர்ச்சகருக்கு தட்டில் காசு வைத்த பிறகே தீபத்தை வணங்க வேண்டும். விபூதி பிரசாதத்தை வாங்கிய பிறகு தட்டில் பணம் போடுதல் கூடாது. (ஆனால் கருமக் காரியங்கள் செய்யும் போது மட்டும் எல்லாம் முடிந்தபிறகே காரியம் செய்தவருக்கு பணம் கொடுத்து வழி அனுப்ப வேண்டும். இப்படிச் செய்தால் கருமமும் தொலையும்.)

கோபுரத்தைக் கடந்து பலிபீடம் அருகில் சென்று வடக்கு நோக்கி உடல் முழுமையும் தரையில் படும்படி விழுந்து வணங்கவேண்டும்.

வடக்கு நோக்கி தலை வைத்து வணங்கும்போது கால்கள் தெற்கு நோக்கி நீண்டிருக்கும். எனவே கீழே விழுந்து கும்பிடும் முன், கால்களை நீட்டினால், தெற்குப் பகுதியில் நால்வர் சந்நதியோ, சுவாமி சந்நதிகளோ இருக்குமானால், வடக்கு நோக்கி விழுந்துக் கும்பிடக்கூடாது. (உதாரணம் புதுச்சேரி ஸ்ரீ வேத புரிஸ்வரர் கோயிலில் பக்தர்கள் வடக்கு நோக்கி விழுந்து நடராஜரை வணங்கும் ஆசையில் தெற்கில் இருக்கும் நால்வர் சந்நதியிலுள்ள சம்மந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகரை நோக்கி கால்களை நீட்டி இருப்பதை மறந்து விடுகிறார்கள். பக்தர்களின் கால்கள் நால்வர்களை நோக்கி நீட்டுவதாக மட்டும் அல்லாது, தேவார திருவாசகத்தை அவமதிப்பதாக ஆகிவிடும். கோவிலுக்கு புண்ணியம் தேட வந்து, பாவத்தை பெற்றுச் செல்வதாகிவிடும். இதைப்போல் பல கோயில்கள் அமைந்துள்ளன. இதுபோன்ற திருக் கோயில்களில் பக்தர்கள் நந்தியம் பெருமானிடம் விழுந்து வணங்குகிறார்கள். இப்படி வணங்குதல் நந்தியை மட்டுமே வணங்குவது போன்றதாகும். ஆலயங்களில் பலிபீடத்துக்கு முன்பாக விழுந்து வணங்குவது கோயிலுக்குள் அமைந்திருக்கும் அனைத்து தெய்வங்களையும் வணங்குவதாகும். இது போன்ற அமைப்புள்ள திருக்கோயில்களில் சுவாமிக்கு நேராக தலை வைத்து (மேற்கு கிழக்காகவோ அல்லது மூலவர் மேற்கு நோக்கி அமைந்திருந்தால் கிழக்கு மேற்காகவோ) வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

அதிகார வாகனம், கொடிமரம், பலிபீட எல்லைக்குப் பிறகு சூரியன், சந்திரன், சனி, பைரவர் போன்ற தெய்வங்களைத் தவிர மற்ற தெய்வ சந்நதிகள் அமைக்கக்கூடாது. அதற்குத்தான் அனைத்து தெய்வங்களையும் வணங்கும் விதமாக பலி பீடத்தின் முன்பாக வீழ்ந்து வணங்குகிறோம். அதன் பிறகு கோயிலுக்குள் எங்கும் விழுந்து வணங்குதல் கூடாது. கோயிலுக்குள் நுழையும் போதும், சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வரும்போதும் பலி பீடத்தின் முன்பு விழுந்து வணங்கி விட்டு வருவது நல்லது. அப்படி கும்பிட்டப் பிறகு சற்று அமர்ந்து இளைப்பாற வேண்டும்.

சுவாமி தரிசனம் செய்தபின், கோயிலை விட்டு வெளியே வரும்போது பிச்சையிடுதல் கூடாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்தோத்ர கதம்பம்

வழிபடுபவர் நெஞ்சமே கோயிலாகும்

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. திருமூலர்

காரிய சித்தி மாலை

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர் வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அக்
கடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைநின்றாம்
செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்?
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப்பயன் யாவன்?
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.
பாச அறிவில் பசு அறிவில்
பற்றற்கரிய பரன் யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
மாற்றி மேலாம் அறிவான
நேசன் எவன் அக்கணபதியை
திகழச் சரணம் அடைகின்றோம்.

ஸ்ரீ கணபதி தியானம்

ப்ரகாஸ ஸ்வரூபம் நமோ வாயுரூபம்
லிகாராதி ஹேதும் கலாதார பூதம்ஸ
அநேக க்ரியா யோக ஸக்தி ஸ்வரூபம்
ஸதாவிஸ்வரூபம் கணேஸம் நமாமி!!

விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிடியதன் உருஉமை கொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதி வர அருளினன் - மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே — சம்பந்தர்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை, ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே — திருமூலர்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை — கபிலதேவ நாயனார்

முன்னவனே யானை முகத்தவனே முக்தி நலஞ்
சொன்னவனே தூய்மெய் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செங்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள் சரண்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம்
மேனி நுடங்காது - பூக்கொண்டு துப்பார் திருமேனித்
தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு.

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கை தொழும்
கணபதி என்றிடக் கருமம்
ஆதலால் கணபதி என்றிடக் கவலை தீருமே

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும்
கலந்துனக்கு நான் தருவேன்
கோலம் செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ
எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா.

விநாயகர் அகவல்

விநாயகர் அகவல் பன்னிரு திருமுறையில் இடம் பெறாத நூல் என்றாலும் அதில் சைவ சித்தாந்த கருத்துக்கள் பொதிந்திருப்பதால் இவ்வழிபாட்டு திரட்டில் சேர்க்கப் பட்டுள்ளது.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எரிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidya Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொல்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில்புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்துஎனக்கு அருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தி
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்கு அருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்தை அழுத்தி என்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

சிவபெருமான் துதிகள்

நன்றுடை யானைத் தீய திலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத் திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே *(சம்பந்தர்)*

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியயென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் அன்றே.

பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப்
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே. *(சுந்தரர்)*

சொற்றுணை வேதியன், சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சி வாயவே! *(அப்பர்)*

பண்ணின் **இசையாகி** நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Srj V Hariharan Collection, Sholinganallur, Chennai

எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந் தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (அப்பர்)

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. (அப்பர்)

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சு ஆடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே. (அப்பர்)

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே! மழப்பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்க கேனே!
(சுந்தரர்)

முந்தி தானே முளைத்தானை மூரிவெள்ளேறு ஊர்ந்தானை
அந்தி செல்வான் அடியானை அரக்கன் ஆற்றல் அழித்தானை
சிந்தை வெள்ளப்புனல் ஆட்டிச் செஞ்சொல் மாலை அடிசேர்த்தி
எந்தை பெம்மான் என் எம்மான் என்பார்பாவ நாசமே.

திரு நந்திதேவர் துதி

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே. (திருமூலர்)

சண்டிகேசுவரர் துதி

அண்டபிரானும் தொண்டர் தமக்கு அதிபன் ஆக்கி அனைத்தும் நாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதம் தந்தோம் என்று அங்கு அவர்பொன் தடமுடிக்குத்
துண்டமதி சேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூடினார்.

நால்வர் வழிபாடு

பூமியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதா வூரர்திருத்தாள் போற்றி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Nanganallur, Chennai

திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதாவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

1. சிவபுராணம். (1) 95 வரிகள்

(சிவனது அநாதி முறைமையான பழமை)

நமச்சிவாய வா(அ)ழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் - தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்-தன் பூம்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீர்ஆர் பெருந்துறை நம்தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம்-தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண்-நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்துஎய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்று அறியேன்
புல்ஆகி பூடுஆய் புழுஆய் மரம்ஆகி
பல்விருகம்ஆகி பறவைஆய் பாம்புஆகி
கல்ஆய் மனிதர்ஆய் பேய்ஆய் கணங்கள் ஆய்
வல்அசுரர்ஆகி முனிவர்ஆய் தேவர்ஆய்
செல்லாஅநின்ற இத்தாவர-சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidyanandi SGV Hariharan Collection, Sholinganallur, Chennai

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய் ஆயினஎல்லாம் போய்அகல வந்துஅருளி
மெய்ஞ்ஞானம்ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துஉலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தால் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் - தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அரும்கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கம் புழு அழுக்குமூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்புஆகிக் கசிந்து உள்உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல்வந்து அருளி நீள் கழல்கள் காஅட்டி
நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசம் ஆம்பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட
பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவு இலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆர்உயிர் ஆய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையும்ஆய் அல்லையும் ஆம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்
நோக்கு அரியநோக்கே நுணுக்குஅரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பு அரிய பேர் ஒளியே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆற்று இன்பவெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடர்ஒளி ஆய்ச்சொல்லாத நுண்உணர்வு ஆய்
மாற்றம்ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவு ஆம்
தேற்றனே தேற்றத்தெளிவே என்சிந்தனையுள்
ஊற்று ஆன உண்ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்து இருந்துபொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டுஅழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம்பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

திருஆரூர் போற்றித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர் அருளிய 108 போற்றிகளும் மந்திர ஆற்றல் மிக்கதால் சிவ வழிபாட்டில் ஒவ்வொரு முறை மலர் தூவும்போது இப் போற்றித் திருத்தாண்டகத்தை கூறி அர்ச்சிக்க, வாழ்வில் வளமும் நலமும் பெறலாம்.

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி!
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி!
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி!
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி!
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி!
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி!
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 1

வங்கமலி கடல் நஞ்சம் உண்டாய் போற்றி!
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி!
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி!
கொல்புலித் தோலாடைக் குழகா போற்றி!
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி!
ஆலமர நீழல் அறஞ் சொன்னாய் போற்றி!
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 2

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Hariharan Collection, Sholinganallur, Chennai
மலையான் மடந்தை மணவாளா போற்றி!
மழவிடையாய்! நின்பாதம் போற்றிபோற்றி!
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி!
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி!
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி!
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி!
சிலையால் அன்று எயிலெரித்த சிவனே போற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 3

பொன் இயலும் மேனியனே போற்றிபோற்றி!
பூதப்படையுடையாய் போற்றிபோற்றி!
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி!
மழுயேந்து கையானே போற்றிபோற்றி!
உன்னுமவர்க்கு உண்மையனே போற்றிபோற்றி!
உலகுக்கு ஒருவனே போற்றிபோற்றி!
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றிபோற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 4

நஞ்சுடைய கண்டனே போற்றிபோற்றி!
நற்றவனே நின்பாதம் போற்றிபோற்றி!
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றிபோற்றி!
வெண்மதி அம்கண்ணி விகிர்தா போற்றி!
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி!
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி!
செஞ்சடையாய் நின்பாதம் போற்றிபோற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 5

சங்கரனே நின்பாதம் போற்றிபோற்றி!
சதாசிவனே நின்பாதம் போற்றிபோற்றி!
பொங்கரவா நின்பாதம் போற்றிபோற்றி!
புண்ணியனே நின்பாதம் போற்றிபோற்றி!
அங்கமலத்து அயனோடு மாலுங் காணா!
அனலுருவா நின்பாதம் போற்றிபோற்றி!
செங்கமலத் திருப்பாதம் போற்றிபோற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 6

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி!
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி!
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி!
குரைகழலால் கூற்றுதைத்த கோவே போற்றி!
நம்புமவர்க்கு அரும்பொருளே போற்றிபோற்றி!
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி!
செம்பொனே மரகதமே மணியே போற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 7

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி!
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
வள்ளலே போற்றி! மணாளா போற்றி!
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி!
வெள்ளைஏறு ஏறும் விகிர்தா போற்றி!
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி!
தெள்ளுநீர்க்கங்கைச் சடையாய் போற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 8
பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி!
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி!
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி!
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி!
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி!
சங்கொத்த நீற்று எம்சதுரா போற்றி!
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றிபோற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 9
பிரமன்தரான் சிரமரிந்த பெரியோய் போற்றி!
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி!
கரம்நான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி!
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி!
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி!
அன்று அரக்கன் ஐந்நான்குதோளும் தாளும்,
சிரம் நெரித்த சேவடியாய் போற்றிபோற்றி!
திருமூலட்டானனே போற்றிபோற்றி! 10

- திருச்சிற்றம்பலம் -

திருஞானசம்பந்தர் அருளிய
திருமணம் கூட்டி வைக்கும் தீந்தமிழ்த் திருப்பதிகம்

நீறுவரி ஆடுஅரவொடு ஆமை மனவு
என்புநிறை பூண்பர் இடபம்
ஏறுவர் யாவரும் இறைஞ்சு கழல்
ஆதியர் இருந்த இடம் ஆம்
தாறுவிரி பூகம்மலி வாழை விரை
நாறஆணை வாளை மடுவில்
வேறு பிரியாது விளையாட வளம்
ஆகும் வயல் வேதி குடியே. 1
சொற்பிரிவு இலாதமறை பாடி நடம்
ஆடுவர் தொல் ஆனை உரிவை
மற்புரி புயத்துஇனிது மேவுவர் எந்-
நாளும்வளர் வானவர் தொழத்
துற்ப அரிய நஞ்சு அமுதமாக முன்அயின்றவர்
இயன்ற தொகுசீர்
வெற்பு அரையன் மங்கைஒரு பங்கர்நகர்
என்பர்திரு வேதிகுடியே. 2

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போழும்மதி பூண்அரவு கொன்றை மலர்
துன்றுசடை வென்றி புகமேல்
வாழும்நதி தாழும் அருளாளர் இருள்
ஆர்மிடறர் மாதர் இமையோர்
சூழும்இரவாளர் திருமார்பில் விரிநூலர்
வரிதோலர் உடைமேல்
வேழஉரி போர்வையினர் மேவுமதி
என்பர்திரு வேதிகுடியே. 3

காடர்கரி காலர்கனல் கையர் அனல்
மெய்யர்உடல் செய்யர் செவியில்
தோடர் தெரி கீளர்சரி கோவணவர்
ஆவணவர் தொல்லை நகர்தான்
பாடல் உடையார்கள் அடியார்கள்
மலரோடு புனல் கொண்டு பணிவார்
வேடம் ஒளி ஆனபொடி பூசி இசை
மேவுதிரு வேதிகுடியே. 4

சொக்கர் துணை மிக்க எயில் உக்கு அற
முனிந்து தொழும் மூவர் மகிழத்
தக்க அருள் பக்கம் உற வைத்த அரனார்
இனிது தங்கும் நகர்தான்
கொக்கு அரவம் உற்ற பொழில் வெற்றி நிழல்
பற்றி வரி வண்டு இசை குலாம்
மிக்கு அமரர் மெச்சிஇனிது அச்சம் இடர்
போக நல்கு வேதி குடியே. 5

செய்யதிரு மேனிமிசை வெண்பொடி அணிந்து
கருமான் உரிவை போர்த்து
ஐயம் இடும் என்று மட மங்கை யொடு
அகம் திரியும் அண்ணால் இடமாம்
வையம் விலை மாறிடினும் ஏறுபுகழ்
மிக்கு இழிவு இலாதவகையார்
வெய்ய மொழி கண்புலவருக்கு உரை
செயாத அவர் வேதிகுடியே. 6

உன்னி இரு போதும் அடி பேணும் அடி
யார் தம் இடர் ஒல்க அருளி
துன்னி ஒரு நால்வருடன் ஆல் நிழல்
இருந்த துணை வன்தன் இடமாம்.
கன்னிய ரொடு ஆடவர்கள் மாமணம்
விரும்பி அரு மங்கலம் மிக
மின் இயலும் துண்இடை நல் மங்கையர்
இயற்று பதி வேதிகுடியே. 7

உரக்கரம் நெருப்பு எழ நெருக்கி வரை
பற்றிய ஒருத்தன் முடிதோள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அரக்கனை அடர்த்தவன் இசைக்கு இனிது
நல்கி அருள் அங்கணன் இடம்
முருக்குஇதழ் மடக்கொடு மடந்தையரும்
ஆடவரும் மொய்த்த கலவை
விரைக்குழல் மிகக்கமழ விண்இசை
உலாவுதிரு வேதிகுடியே. 8

பூவின்மிசை அந்தணனொடு ஆழிபொலி
அங்கையனும் நேட எரிஆய்
தேவும்இவர் அல்லர் இனி யாவர்என
நின்று திகழ் கின்றவர்இடம்
பாவலர்கள் ஓசை இயல் கேள்விஅது
அறாத கொடையாளர் பயில்வாம்
மேவுஅரிய செல்வம்நெடு மாடம் வளர்
வீதி நிகழ் வேதிகுடியே. 9

வஞ்சஅமணர் தேரர் மதிகேடர் தம்மனத்து
அறிவிலாதவர் மொழி
தஞ்சம்என என்றும் உணராத அடியார்
கருது சைவன் இடமாம்
அஞ்சுபுலன் வென்று அறுவகைப் பொருள்
தெரிந்துஎழு இசைக்கிளவியால்
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவி
நிகழ்கின்ற திருவேதிகுடியே. 10

கந்தம்மலி தண்பொழில் நல்மாடம் மிடை
காழி வளர் ஞானம் உணர்
சம்பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு
வேதி குடி ஆதி கழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்கள்
என்ன நிகழ்வு எய்தி இமையோர்
அந்த உலகு எய்தி அரசு ஆளும் அதுவே
சரதம் ஆணை நமதே. 11

ஸ்ரீ காமாக்ஷி அஷ்டகம்

குருவே சரணம் குருவின் உருவில்
குவலயத்தே எனை ஆளவந்தாய்
திருவே சரணம்! திருமால் சோதரி
திருவடி இணையே சரணம் அம்மா
வருவாய் நினைவில் வந்தென்னை ஆள்வாய்
வடிவாம்பிகையே! சரணம் அம்மா!
அருள்வாய் எனையே! அனுதினம் பணிந்தேன்
அன்னை காமாக்ஷி உமையவளே!
களபமுஞ் சந்தனங் கஸ்தூரி மஞ்சளுங்
குங்குமமும் நறுஞ் சாந்தும்;
பளபள வெனவே பேரொளி வீசிடும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vandikar Pandit Sri V. Haritharan Collection, Sholinganallur, Chennai
பொன் [illegible] திகழ்மேனி!
இளநகை அரும்பும் எழில் வதனந்தனை
என்ன வெனப் புகழ்வேன்!
அளவிட முடியா ஆற்றலும் கருணை கொள்
அன்னை காமாக்ஷி உமையவளே!
சூரனை வென்றிடச் சரவணபவனெனும்
சூரனை ஈன்றவளே!
கூரிய வேலைக் குமரனுக்கே யருள் கோமகளே சிவசக்தி!
தீர பராக்கிரமம் திக்கெல்லாம் பரவத்
தீனருக்கே சரண் நீயன்றே!
ஆரமுதே எங்கள் ஆனந்தமே
திரு அன்னை காமாக்ஷி உமையவளே.

ஸ்ரீ மீனாக்ஷி ஸ்துதி

அம்மை காமாக்ஷியே கருணா கடாக்ஷியே
அரிய மதுரை யாளும் மீனாக்ஷியே
நம்பும் அடியார்கள் கண்ணுறும் காக்ஷியே
நாகை யதனில் வாழும் நீலாய தாக்ஷியே
சம்பு மோகித்திடும் காசி விசாலாட்க்ஷியே.
சாலத் திகழும் ஆரூர் கமலாட்க்ஷியே
அடியாரைக் கரையேற்றும் அகிலாண்ட நாயகியே
கும்பிட்டு உனதடிக் குறுகிப் பணிந்தோம்
கௌரியே எழுந்தருள்வாயே.

ப்ரத்தியங்கிரா

ஓம் சக்ஷம் பசக்ஷ ஜ்வாலா ஜிஹ்வே
காரள தம்ஷ்ட்ரே காளராத்ரி பிரத்யங்கிரே
சக்ஷம் ஹ்ரீம் ஹூம் பட் சுவாஹா

ஓம் பிரத்தியங்கிரா தேவ்யை ச வித்மஹே
சரப பக்னைச தீமஹி
தன்னோ சக்தி ப்ரஜோதயாத்

அபிராமியம்மை பதிகம்.

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனமதரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவா ராதநட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit [illegible] Collection, Sholinganallur, Chennai

தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை

காப்பு

ஆக்கும் தொழில் ஐந்து அரன் ஆற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபோல்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கண நாயக வாரணமே
கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெரியார் நிலை எண்ணில்தவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க்கு எமனாக எடுத்தவனே
வற்றாத அருள் சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோல கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற்று எளியேன் நின்றேன்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.
முத்தேவரும் முத்தொழில் ஆற்றிடவே
முன்னின்று அருளும் முதல்வி சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாஸினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு தத்திக்கு இணைவாழ்வு உடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம் செயும் ஆனந்த மேடை
சிந்தை நிரம்ப வளம் பொழி பாரோர்
தேன் பொழிலாம் இது செய்தவள் யாரோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
எந்த இடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவருக்கு அருள் எண்ணம் மிகுந்தாள்
மந்திர வேதமயப் பொருள் ஆனாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
காணக் கிடையாக் கதியானவளே
கருதக் கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாக் பொலிவானவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக் ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
கதி ஜதி லயமே இசையே சரணம்
அர ஹர சிவ என்று அடியவர் குழும்
அவர் அருள் பெற அருள் அமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயச்க்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான நிலவே
குழல் யாழ் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
ரஞ்சினி நந்தினி அங்கணி பதும
ராக விகாஸ வியாபிணி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்திர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்கிருத பூரணி
அம்ருத சொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சள் மேரு சிருங்க நிவாஸினி
மாத ஜெய ஓம் லலிதாம்பிகையே
வலை ஒத்த வினை கலை ஒத்த மனம்
மருளப் பறையாறு ஒலி ஒத்த விதால்
நிலையற்று எளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற்று அசைவற்று அநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Jnanodaya V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எலாம் அடைவார்
சிவரத்தினமாய்த் திகழ்வார் அவரே.

ஸ்ரீ அன்ன பூரணாஷ்டகம்

நித்யானந்தரீ கலராபயகரி
 சௌந்தர்ய ரத்னாகரீ
நீர் தூதாகில கோர பாபநிகரீ
 ப்ரத்யக்ஷ மாஹேஸ்வரி
ப்ராலே யாசல வம்ஸ பாலனகரீ
 காஸி புரா தீஸ்வரி
பிஷாம் தேஹி க்ருபா வலம்பனகரீ
 மாதான்ன பூர்ணேஸ்வரி
நானா ரத்ன விசித்ர பூஷணகரீ
 ஹேமாம்ப ராடம்பரீ
முகதாஹார விலம்பமான
 விலஷத் லக்ஷோஜ கும்பாந்திரீ
காஷ்மீர கருவாஸீத ருசிக்ரீ
 காஸி புரா தீஸ்வரி
பிஷாம் தேஹி க்ருபா வலம்பனகரீ
 மாதான்ன பூர்ணேஸ்வரி
யோகானந்தகரீ ரிபுக்ஷயகரீ
 தர்மைக நிஷ்டாகரீ
சந்த்ரார் கான்ல பாஸமானலஹிரி
 த்ரை லோக்யா க்ஷாகரீ
ஸர்வைஸ்வாயகரீ தப : பலகரீ
 காஸி புராதீஸ்வரி
பிக்ஷாம் தேஹீ க்ருபாவலம்பனகரீ
 மாதான்ன பூர்ணேஸ்வரி
கைலா ஸாகம் கந்தரா லயகரீ
 கௌரி உமாஸங்கரீ
கௌ மாரீ நிகமார்த்த
 கோசரகரீ ஓக்கார பீஜாக்ஷரி
மோக்ஷக்லார கலாட படானகரீ
 காஸி புரா தீஸ்வரி
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ
 மாதான்ன பூர்ணேஸ்வரி
திருஸ்யா திருஸ்ய விபூதி வாஹன
 கரீ பிரம்மாண்ட பாண்டோதரீ
லீலா நடாக சூத்ர கேலகனகரீ
 விஞ்ஞான தீபாங்குரீ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆக்ஷாந்த ஸமஸ்வலாண் ணகரீ
ஸம்போ ஸ்திரீ பாலாகரீ
காஸ்மீரா த்ரிபு ரேஸ்லரீ த்ரியைனி
விஸ்வேஸ்வரி ஸாலரீ
ஸ்வர்க்கத் வார கலாட படானகரீ
காசி புராதீஸ்வரி
பிக்ஷாம் தேஹி க்ருபா வலம்பனகரீ
மாதான்ன பூர்ணேஸ்வரி
உளவிஸர்வ ஜனேஸ்வரீ ஜயகரி
மாதா க்ருபாஸாகரீ
வேணீ நீல ஸமான குந்தலகரீ
நித்யான்ன தானேஸ்வரீ
ஸாக்ஷான் மோக்ஷகரி ஸதா ஸுபகரி
காசி புராதேஸ்வரீ
பிக்ஷாம் தேஹிக்ருபா வலம்பனகரி
மாதன்ன பூர்ணேஸ்வரி
தேவி ஸர்வ விசித்ர ரத்ன ரசிதா
தாக்ஷாயணி ஸுந்தரி
லாமாஸ்லாது பயோதரா ப்ரியகரீ
ஸௌபாக்ய மஹேஸ்வரி
பக்தா பீஷ்டகரீ ஸதாஸரபகரி
காசி புராதீஸ்வரீ
பிக்ஷாம் தேஹிக்ருபா வலம் பனகரீ
மாதான்ன பூர்ணேஸ்வரி
சந்த்ரார்க் கானல கோடி கோடி ஸந்ருஸி
சந்தராம்ஸு பிம்பாகரீ
சந்த்ரார் காக்னி - ஸமான குண்டலகரீ
சந்த்ரார் கதர்ணேஸ்வரீ
மாலா புஸ்தக பாஸாங்குஸதரீ காசி புராதேஸ்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபால வலம்பனகரி
மாதான்ன பூர்ணஸ்வரி
க்ஷத்ரத் ராணகரீ மஹாபயகரீ மாதாக்ருபாஸாகரி
ஸர்வானந்தகரீ ஸதாஸிவலகரீ விஸ்வேஸ்வரீ ஶ்ரீதரீ
தக்ஷாக்ரந்தகரீ நிராம பயகரீ காசி புராதேஸ்வரி
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம் பனகரீ மாதான்ன பூர்ணேஸ்வரி
அன்ன பூர்ணே ஸதாபூர்ணே ஸங்கர ப்ராண வல்லபே
க்ஞான வைராக்ய வஸித்யர்த்தம் பிக்ஷாம் தேஹி ச பார்வதி
மாதாச பார்வதீ தேவி பிதாதேவோ மஹேஸ்வர:
பாந்தவா வஸிபக்தாஸ் சஸவதேஸோ புவனத்ரயம்.

பைரவி

த்ரிபுராயை சவித்மஹே
பைரவ்யை ச தீமஹி தந்நோ
பைரவி ப்ரஜோதயாத் -

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Yagnaraman Collection, Sholinganallur, Chennai

முருகப்பெருமான் வணக்கம்

பன்னிருகரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய்போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்கா கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாலடி வைகும் செல்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க ளெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேலென வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்.
முருகா என்று ஓதுவார்முன்.

நாளென் செயும்? வினை தான்என் செயும்? எனை நாடிவந்த
கோளென செயும்? கொடுங் கூற்று என்செயும்? குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே.

- கந்தர் அலங்காரம்

உன்னை ஒழிய ஒருவரையும நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தில் வாழ்வே!

நக்கீரர்

தண்டாயுதமும் தனிவேலும் தன் கரத்தில்
கொண்டாடல் செய்கின்ற குருநாதா வண்டாரும்
செங்கடம்பு பூத்த திண்தோள் சேவகனே நீ எனது
சங்கடங்கள் எல்லாம் தவிர்.

அபகார நிந்தை பட்டு உழலாதே
அறியாத வஞ்சகரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன் தனக்கு இளையோனே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Digitized by Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai
இ[illegible] உத்தம பாலா
ஜபமாலை தந்த சற்குரு நாதா!
திருவாவினன் குடிப்பெருமாளே!

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழிபேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபட சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

(நாமாவளி)

சுப்ரமணியம் சுப்ரமணியம்!
சுப்ரமணியம் சுப்ரமணியம் ஓம் சரவணபவ சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் குக சரவணபவ சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் சரவண பவகுக சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் சம்பு குமார சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் கார்த்திகேயா சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் கலியுகவரதா சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் சிவசிவ சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் சண்முகா சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் காப்பாய் நாளும் சுப்ரமணியம்.

அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் நீ வாவா முருகா
இன்பமய ஜோதியே நீ வாவா முருகா
ஈசன் உமை பாலகனே நீ வாவா முருகா
உலகநாபன் மருமகனே நீ வாவா முருகா
ஊமைக்கு அருள் புரிந்தவனே நீ வாவா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வாவா முருகா
ஏறு மயில் ஏறியே நீ வாவா முருகா
ஐங்கரனுக்கு இளையவனே நீ வாவா முருகா
அகில லோக நாயகனே நீ வாவா முருகா
ஒய்யாரி தத்துவனே நீ வாவா முருகா
ஓங்காரத் தத்துவனே நீ வாவா முருகா
ஔவைக்கு உபதேசித்தவா நீ வாவா முருகா .

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய

மகா மந்திர மகிமை வாய்ந்த

சண்முக கவசம்

அண்டமாய் அவனிஆகி அறியொணாப் பொருளது ஆகி
தொண்டர்கள் குருவும் ஆகித் துகளறு தெய்வம் ஆகி
எண்திசை போற்ற நின்ற என்னருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க. 1

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தான் இரு நுதலை காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசிலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க. 2

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நா பல் முழுதும் நல் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்பரமணியன் காக்க. 3

ஈசனாம் வாகு லேயன் எனது சுந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை ஈரா(று) ஆயுதன் காக்க என்றன்
ஏசிலா முழங்கை தன்னை எழிற்குறிஞ் சிக்கோன் காக்க. 4

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமால் மருகன் காக்க பின் முதுகைச் சேய் காக்க. 5

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க. 6

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அஞ்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான் திமிரும்முன் தொடையைக் காக்க.

ஏரகத் தேவன் என்தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க. 8

ஐயுறு மலையன் பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநிநாத பரன் அகம் காலைக் காக்க
மெய்யுடல் முழுதும் ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க. 9

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூதப்ரேதம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit ... Sholinganallur, Chennai

பலிகொள் இராக்கதப்பேய் பகைகளைத் தெவ்வரானாலும்
கிலிகொள எனை வேல் காக்கக் கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க. 10

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணியில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடிபரசு ஈட்டி ஆதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்
தீங்குசெய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க. 11

ஔவியம் உளர் ஊன்உண்போர் அசுரர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவரானாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவாராயின் சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கை அயில் வேல் காக்க காக்க. 12

கடுவிடப்பாந்தள் சிங்கம் கரடி நாய் புலி மாயானை
கொடிய ஓணாய் குரங்கு கோலமார்ச் சாலம் சம்பு
நடையுடை எதனாலேனும் நான் இடர்ப் பட்டிடாமல்
சடுதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க. 13

ஙகரமே போல்தழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரி தேள் நண்டுக்காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால் எற்கோர் ஊறிலா(து) ஐவேல் காக்க 14

சலத்தில் உய்வன்மீன் ஏறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால் நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. 15

ஞமலியம்பரியன் கைவேல் நவக்கிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்த சூலை ஆக்ராணரோகம்
திமிர்கழல் வாதம் சோகை சிரம் அடி கர்ணரோகம்
எமையணு காமலேபன்னிருபுயன் சயவேல் காக்க. 16

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிட கண்டமாலை
குமறு விப்புருதி குன்மம் குடல்வலி யீழை காசம்
நிமிரொணாது இருத்தும் வெட்டை நீர்ப்பிர மேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க. 17

இணக்கம் இல்லாத பித்த எரிவுமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்கும் குட்டம் மூலவெண், முளைதீ மந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலமென்றறையும் இந்தப்
பிணிக்குலம் எனையாளாமல் பெருஞ்சத்தி வடிவேல் காக்க 18

தவனமா ரோகம் வாதம் சயித்தியம் அரோசகம் மெய்
தவறவே செய்யும் மூலச் சூடு இளைப்பு உடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோய் அண்டவா தங்கள் சூலை
எவையும் என் இடத் தெய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க 19

நமைப்புறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

இமைக்குமுன் உ[illegible]று வலிப்போடு எழுபுடைப் பகந்த ராத் [illegible] அருள்வேல் காக்க 20
Gurukkal Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
இமைப் பொழுதேனும் என்னை எய்தாமல அருள்வேல் காக்க

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரியமேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தாரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க 21

மண்ணினும் மரத்தின்மீதும் மலையினும் நெருப்பின்மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும் சாரி செய்யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறெந்த இடத்தும் என்னை
நண்ணி வந்து அருளார் சஷ்டி நாதன் வேல் காக்க காக்க 22

யகரமே போல் சூலேந்து நறும்புயன் வேல் முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல் பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கை வேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழ் ஐ வேல் கீழ் மேல் காக்க. 23

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க அங்கி
விஞ்சிடு திசையின் ஞானவீரன் வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்காமத்தோன் இகலுடைக்கரவேல் காக்க. 24

லகரமே போல் காளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகர மர்த்தனமே செய்த சங்கரி மகன் கைவேல்
நிகழெனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க மேற்கில்
இகல் அயில் காக்க வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க 25

வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும் ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில் கீழ்க்
கிடக்கையில் தூங்கும் ஞான்றும் கிரிதுளைத் துளவேல் காக்க 26

இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்
வழங்கும் நல்ஊண் உண்போதும் மால்விளையாட்டின்போதும்
பழம்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும்குணத்தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க 27

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்எல் ஓம்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல்கால் சிவகுரு நாதன் காக்க 28

இறகுடைக் கோழி தோகைக்கு இறைமுன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே திகழ்பின் இராவில் காக்க
நறவுசேர் தாள்சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க 29

இனமெனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவணபவனார் காக்க
நனியனுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்க வந்தே. 30

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit [illegible]anallur, Chennai

தேவராய சுவாமிகள் அருளிய

கந்தர் சஷ்டி கவசம்

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்; துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும்; நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை

குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறுஇடும் வேலவன் நித்தம் வருக!
சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்துஎனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும், தனிஒளி யொவ்வும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V [illegible] Collection, Sholinganallur, Chennai
குண்டலியாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்,
நீறுஇடும் நெற்றியும் நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்,
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறுஇரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,
முப்புரி நூலும் முத்துஅணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்,
நவரத்னம் பதித்த நற்சீராவும்,
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்,
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க,
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகவென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிடிகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலால லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன்என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்துஉன் இனையடி காக்க!
என்உயிர்க்(கு) உயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப்பெருவேல் காக்க!
முப்பத்து இருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

மார்பை இரத்ன வடிவேல் காக்க!
சேர்இள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவனிருக்க!
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக!
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வஜ்ரவேல் காக்க!
அரைஇருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க! காக்க! கனவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட,
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராட் சதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிபடும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருபழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
கால தூதாள்எனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல்எரி
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக,
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட,
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்(து)உயர் அங்கம்
ஏறிய விடங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்,
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்,
சூலைசயம் குன்மம் சொக்கு சிரங்கு,
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி,
பக்கப் பிளவை படர்தொடை வாழை,
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி,
பற்குத் தரணை பருஅரை யாப்பும்,
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துஉற வாகவும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidike Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழ்ஒளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை ஏற்ற இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துஉறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யான்உனைப் பாட,
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க! மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க! வாரணத் துவசன்
வாழ்க வாழ்க! என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீது மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையும் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihan Collection, Sholinganallur, Chennai

நேசமுடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீறு அணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தாங்கு அருளுவர்
மாற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி! கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்குஓர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரஹண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

திருச்சிற்றம்பலம்

வெளியில் செல்லும்போது இம் மந்திரத்தை ஓதினால் இடர்கள் விலகும்

வேல் வேல் வெற்றிவேல்
சுற்றிவந்து எமை காக்கும்
சுப்பிரமணிய வேல்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

குமாரஸ்தவம்

(தினமும் பாராயணத்துடன் ஒவ்வொருவரியின் (முடிவில் மலரிடவும்)

ஓம் ஷட்கோண பதயே நமோ நமஹ
ஓம் ஷண்மத பதயே நமோ நமஹ
ஓம் ஷட்க்ரீவ பதயே நமோ நமஹ
ஓம் ஷட்கிரீட பதயே நமோ நமஹ
ஓம் ஷட்கோண பதயே நமோ நமஹ
ஓம் ஷட்கோச பதயே நமோ நமஹ
ஓம் நவநிதி பதயே நமோ நமஹ
ஓம் சுபநிதி பதயே நமோ நமஹ
ஓம் நரபதி பதயே நமோ நமஹ
ஓம் சுரபதி பதயே நமோ நமஹ
ஓம் நடச்சிவ பதயே நமோ நமஹ
ஓம் ஷடாக்ஷர பதயே நமோ நமஹ
ஓம் கவிராஜ பதயே நமோ நமஹ
ஓம் தபராஜ பதயே நமோ நமஹ
ஓம் இஹபர பதயே நமோ நமஹ
ஓம் புகழ்முநி பதயே நமோ நமஹ
ஓம் ஜயஜய பதயே நமோ நமஹ
ஓம் நயநய பதயே நமோ நமஹ
ஓம் மஞ்சுள பதயே நமோ நமஹ
ஓம் குஞ்சரீ பதயே நமோ நமஹ
ஓம் வல்லீ பதயே நமோ நமஹ
ஓம் மல்ல பதயே நமோ நமஹ
ஓம் அஸ்த்ர பதயே நமோ நமஹ
ஓம் சஸ்த்ர பதயே நமோ நமஹ
ஓம் ஷஷ்டி பதயே நமோ நமஹ
ஓம் இஷ்டி பதயே நமோ நமஹ
ஓம் அபேத பதயே நமோ நமஹ
ஓம் ஸுபோத பதயே நமோ நமஹ
ஓம் வியூஹ பதயே நமோ நமஹ
ஓம் மயூர பதயே நமோ நமஹ
ஓம் பூத பதயே நமோ நமஹ
ஓம் வேத பதயே நமோ நமஹ
ஓம் புராண பதயே நமோ நமஹ
ஓம் பக்த பதயே நமோ நமஹ
ஓம் முக்த பதயே நமோ நமஹ
ஓம் அகார பதயே நமோ நமஹ
ஓம் உகார பதயே நமோ நமஹ
ஓம் மகார பதயே நமோ நமஹ
ஓம் விகாச பதயே நமோ நமஹ
ஓம் ஆதி பதயே நமோ நமஹ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
ஓம் பூதி பதயே நமோ நமஹ
ஓம் அமார பதயே நமோ நமஹ
ஓம் குமார பதயே நமோ நமஹ
குமாரஸ்தவம் முற்றும்.

மகா விஷ்ணு

ஓம் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம்ஹாய கவிவாதிநாம்
வேதாந்தாசார்ய வர்யாய வேங்கடேஸாய மங்களம்

திருமால்

சாந்தாகாரம் புஜக சயனம் பத்மனாபம் ஸுரேசம்
விஸ்வா தாரம் ககன சத்ருசம் மேகவர்ணம் சுபாங்கம்
லக்ஷ்மி காந்தம் கமல நயனம்
யோகிஹ்ருத் தியான கவ்யம்
வந்தே விஷ்ணும் பலபய ஹரம் ஸர்வ லோக நாதம்.

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலத்தரஞ் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளோடு பெருநிலம் அளிக்கும்
வளம் தரும் மற்றும் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்ல நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

பச்சை மாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும்
வேண்டேன் அரங்கமாநகர் உளானே.

கல்வி வளர
பரிக்ஷையில் தேர்வு பெற

பாஷ்யாதி ஸர்வ ஸாத்ராண் யேசான்யே நியமாதத
அக்ஷராணிச ஸர்பாணி த்வந்து தேவி நமேஸ்தே!

வேலை கிடைக்க
லக்ஷ்மி கடாக்ஷம் பெற

ஸ்ரீதேவிஹரி அம்ருதோத் பூதா கமலாசந்த்ரசோபாநா
விஷ்ணுபத்நீ வைஷ்ணவிச வாராரோ ஹாச்ச சார்ங்கிணி
ஹரிப்பிரியா தேவதேவி மஹாலக்ஷ்மிச ஸுந்தரி!

ப்ரம்மன்

ஓம் க்லீம் கிருஷ்ணாய கோவிந்தாய
கோபி ஜன வல்லபாய ஸ்வாஹா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சரஸ்வதி துதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒளியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின்று ஒளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள்கூறும்
கருணை வாசகத்து உட்பொருளாவாள்.

ஸ்ரீ ஐயப்பன்

வழிநடைப் பாடல்

சாமியே ஐயப்போ ஐயப்போ சாமியோ
சுவாமியே சரணம் ஐயப்ப சரணம்
ஐயப்ப சரணம் சுவாமி சரணம்
சுவாமி பாதம் ஐயப்ப பாதம்
ஐயப்ப பாதம் சுவாமி பாதம்
கெட்டுங் கெட்டு இருமுடி கட்ட
இருமுடி கட்டு சபரிமலைக்கே
சபரிமலைக்கு இருமுடிகட்டு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
ஏந்திவிடய்ய தூக்கி விடய்யா
தூக்கி விடய்யா ஏந்திவிடய்யா
பாதபலம் தா தேக பலம் தா
தேகம் பலம் தா பாதபலம் தா
தேவியே தேவனே
தேவனே தேவியே
தேவிசரணம் தேவன்சரணம்
தேவன் பாதம் தேவி பாதம்
பகவதியே பகவானே
பகவானே பகவதியே
பகவதி சரணம் பகவான் சரணம்
பகவதி சரணம் பகவான் சரணம்
பகவான் சரணம் பகவதி சரணம்
ஈஸ்வரியே ஈஸ்வரனே
ஈஸ்வரனே ஈஸ்வரியே
கற்பூர ஜோதி காந்தமலை ஜோதி
காந்தமலை ஜோதி கற்பூர ஜோதி
பள்ளிக்கட்டு சபரிமலைக்கே
சபரிமலைக்கே பள்ளிக்கட்டு
நெய்யபிஷேகம் சாமிக்கே
சாமிக்கே நெய்யபிஷேகம்
மணிகண்டா ஐயப்பா மாமலை வாசா ஐயப்பா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chennai

மோஹினி சுதனே ஐயப்பா மோஹன பாலா ஐயப்பா
ஹரிஹரபுத்ரா ஐயப்பா அனாத ரக்ஷிகா ஐயப்பா
எருமேலி வாசா ஐயப்பா எங்களைக் காப்பாய் ஐயப்பா
கலியுக வரதா ஐயப்பா காத்தருள்வாயே ஐயப்பா
முன்னும் பின்னும் ஐயப்பா இடமும் வலமும் ஐயப்பா
காடுமலை கடினம் ஐயப்பா
ரக்ஷிக்கணும் ஐயப்பா
சபரிகிரீஸா ஐயப்பா சாஸ்தா ரூபா ஐயப்பா
தர்ம சாஸ்தா ஐயப்பா சாஸ்தா ஐயப்பா
பார்வதி பாலா ஐயப்பா பந்தள வேந்தே ஐயப்பா
பம்பையின் பாலா ஐயப்பா பாபவிநாசனா ஐயப்பா
ஜகத் மோஹனா ஐயப்பா ஜகத் ரக்ஷகா ஐயப்பா
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே!

ஆஞ்சநேயர்

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாக ஆரியர்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் எம்மை அளித்துக்காப்பான்
ஜெய் அனுமான் ஜெய் அனுமான்
மாருதி ராமா ஜெய் அனுமான்
அஞ்சனிபுத்ர அனுமந்தா ஆஞ்சநேய அனுமந்தா
அருங்கலைவானர அனுமந்தா, அருள்வாய் நாலும் அனுமந்தா
விக்ன ராஜா பிரபு விக்ன ராஜா
பக்தர்கள் இருதயவாசா விக்ன ராஜா
சுப்ரமணியா பிரபு சுப்ரமணியா
திருப்பரங்குன்ற வாசா சுப்ரமணியா
சுந்தரேசா பிரபு சுந்தரேசா
காளத்தி க்ஷேத்ரவாசா சுந்தரேசா
நடராஜா பிரபு நடராஜா
சிதம்பர க்ஷேத்ரவாசா நடராஜா
ராமராஜா பிரபு ராம ராஜா
அயோத்தியாபுரி நிவாச ராமராஜா
கிருஷ்ண ராஜா பிரபு கிருஷ்ணராஜா
துவாரகா புரி நிவாச கிருஷ்ணராஜா
ரங்கராஜா பிரபு ரங்கராஜா
ஸ்ரீ ரங்க க்ஷேத்ர வாசா ரங்கராஜா
வெங்கடேசா பிரபு வெங்கடேசா
திருப்பதி க்ஷேத்திரவாசா வெங்கடேசா
பாண்டுரங்கா பிரபு பாண்டுரங்கா
பண்டரி புர நிவாசா பாண்டுரங்கா
ஆஞ்சநேயா பிரபு ஆஞ்சநேயா
ராம பக்த இருதயவாசா ஆஞ்சநேயா.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri. Hariharan Collection, Sholinganallur, Chennai

தீர்த்தபாலகர் பாடல் - 1

ஆ........ ஆ....... ஆ........
நீலவான மேகம் கருத்து மழையானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நீலவான மேகம் கருத்து மழையானவன்
நிலமடியில் நிலத்தடி நீரானவன்
இளம்பிறையாய் காட்சிதர கடலானவன் நீல கடலானவன்
நீலவான மேகம் கருத்து மழையானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நீலவான மேகம் கருத்து மழையானவன்
தாயைக் கழிக்கலாம் தன் தாரத்தையும் கழிக்கலாம்
சேயைக் கழிக்கலாம் பொரு செல்வத்தையும் கழிக்கலாம்
தாயைக் கழிக்கலாம் தன் தாரத்தையும் கழிக்கலாம்
சேயைக் கழிக்கலாம் பொரு செல்வத்தையும் கழிக்கலாம்
யாரும் யாரையுமே கழிக்கலாம்
எவரும் எவருமே கழிக்கலாம்
நீரை எவருமே கழிப்பாரோ
தீருத்தபாலகரே எதற்கும் தீர்வானவர்
தீருத்தபாலகரே எதற்கும் தீர்வானவர்
நீலவான மேகம் கருத்து மழையானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நீலவான மேகம் கருத்து மழையானவன்
கனியில் சாறானவன் கண்களில் நீரானவன்
பயிரில் உணவானவன் உயிரின் உயிரானவன்
கனியில் சாறானவன் கண்களில் நீரானவன்
பயிரில் உணவானவன் உயிரின் உயிரானவன்
மீன் வாழும் இடமானவனே, மின்சார வடிவானவனே
மான் தேடும் சுனையே, அன்பர் மணம் நாடும் இறையே
மான் தேடும் சுனையே, அன்பர் மணம் நாடும் இறையே
தீர்த்தபாலகரே எதற்கும் தீர்வானவர்
தீர்த்தபாலகரே எதற்கும் தீர்வானவர்
நீலவான் மேகம் கருத்து மழையானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நீலவான் மேகம் கருத்து மழையானவன்
நிலமடியில் நிலத்தடி நீரானவன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
இளம்பிறையாய் காட்சிதர கடலானவன் நில கடலானவன்
நீலவான் மேகம் கருத்து மழையானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நிலவென்னும் வடிவெடுத்து குளிரானவன்
நீலவான் மேகம் கருத்து மழையானவன்

தீர்த்தபாலகர் பாடல் - 2

பல்லவி

தேக தாகம் தீர்க்கும்
தீர்த்த பாலகரே - எங்கள்
தேவை யாவும் தீர்க்கும்
மழைத் தேவரே
தீர்த்த வாரியிலே-புதுவை
தீர்த்த வாரியிலே
தீர்க்க தரிசனம்-அளிக்கும்
தீர்த்த பாலகரே!

துரல் சாரல் துளியாய்
பொழியும் மழையாய் நீயே
குட்டை தாண்டி குளமாகி
ஏரியாக நிறைந்தாயே
வெள்ளம் ஆகி ஆறாகி
அணையில் நீராய் தேங்கியே
இயற்கை எழிலாய் இருப்பவரே
எங்கள் தீர்த்த பாலகரே!
தேக தாகம் தீர்க்கும்
தீர்த்த பாலகரே - எங்கள்
தேவை யாவும் தீர்க்கும்
மழைத் தேவரே

குவளை நீரால்நீ விருந்து
செம்புநீர் மலையாய் வழிநடப்பு
வாளி நீராலே வழிபாடு
குடத்து நீராய் கிரகம் நீ!
மங்கைக்கு மஞ்சள் நீராட்டு-மாசி
மகத்தில் மஞ்சள் திலாட்டு
எங்கும் நிறைந்த நீர்த் தேவா-எங்கள்
புதுவையில் வடிவம் தந்தாயே!
தேக தாகம் தீர்க்கும்
தீர்த்த பாலகரே - எங்கள்
தேவை யாவும் தீர்க்கும்
மழைத் தேவரே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ தீர்த்த பாலகர் போற்றி

நீரின்றி நிலமா
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நீயின்றி நிலமா
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நிலத்தடி நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நினைவடி நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உயிர்த் தோற்றம் உன்னில்தான்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஜெயம் ஆனவரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஜெயக்கொடி பாலகரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பொங்கல் இடுவது நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பொங்கி எழுவாய் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

தெளிந்து கோலம் காட்டுவாய் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உண்ணும் பொருள் செய்பவா
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உணவாகும் உன்னதா
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

கனவிலும் தரிசனம்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நினைவில் உன் தரிசனம்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஊருக்குள் ஊரணி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உலகெலாம் ஓரணி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பெயரிலேயே முன்னனி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பெயருக்கு பிண்ணணி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஏரியில் தேங்கும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஏற்றம் தருவதும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

குளத்தில் தவழும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

குளிர்ச்சியைத் தருவது நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஆறாக ஓடும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

அணையில் தேங்கும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வயலிலே பாயும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

தானியம் ஆகும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Chennai

முகம் சுத்தம் செய்வதும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

முகம் காட்டும் ஆடையும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மண் மேலே மழையாய் விழுவாய்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மண்வாசனை செய்வாய்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

இளநீரும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

இனிய பழச்சாறும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பதநீரும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பன்னீரும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

குடமுழக்க நீரும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

தலை வழுக்க நீரும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

தாய்பால் ஆவதும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மஞ்சள் பால் ஆனவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மஞ்சள் நீராட்டவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நோய்தீர்க்கும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நோன்புக்கு தீர்த்தம் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

புதை நீர் சுனையே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

புனித நீர் ஊற்றே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பால்குடை நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வளமெலாம் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

இளமையும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

இன்பத்தின் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஆன்மாவும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஆனந்தம் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உப்பாகும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உவகையும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

ஆன்மீகம் வளர்ப்பதும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Shri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆனவம் அழிப்பதும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மூச்சிடை தும்மல் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பேச்சிடை உமிழ் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

அம்மைக்கும் பால் வடிவே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

அம்மைக்கு அரு மருந்தே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பயிருக்கு உணவானவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பறவைக்கும் உணவானவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

சிற்பிக்குள் முத்தும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

சித்தர்கள் சொத்தும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

விளக்கிடும் எண்ணெய் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

விளக்கிடும் ஒளியும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மருந்தாகும் பச்சிலைச் சாறே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மகிழ்வூட்டும் பழச்சாறே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

காட்டுக்குள் அணையும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மலையிடை அருவியும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பாமைக்கு விருந்து நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பசும் புல்லில் மருந்து நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

எழில் மிகு வடிவம் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

எங்கெங்கும் நிறைந்தவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மண்ணடியில் சுரப்பவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

மழை முகிலாய் நடப்பவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வேர்வையாய் வழியும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வேர் உண்டு மலரும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நீர் பிரிந்து துளிகள் ஆகும்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நீர் சேர்ந்தால் அலைகள் ஆகும்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பனி மலையாய் உயரும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குளிர்பானம் ஆகும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

அழும் போது துயரக் கண்ணீர்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

அகமகிழ ஆனந்தக் கண்ணீர்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

அமைதியான அலையான
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

விளையாட துணையான
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

அடைப்பட்டு அணையில் நிற்பாய்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வெகுண்டாய் நீ வெள்ளம் ஆவாய்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வாவிகளுடன் நீராடுவார்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பக்தர்களும் நீராடுவார்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பாவங்களே போக்கிடுவாய்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

புண்ணியம் சேர்த்திடுவாய்
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பாவம் தீர்க்கும் கங்கையும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

கழி நீர் ஆவது நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நிலத்திற்கு உயிரே நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உயிர்க்கெல்லாம் உயிரே நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உடல் சூட்டைக் குறைப்பவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உடலுக்குள் நிறைந்தவனே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உப்பாக பூப்பது நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

இடம் பல மாறிடுவாயே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நிறம் பல மாறிடுவாயே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

நெய் வடிவாய் மாறும் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

பள்ளத்தில் குடி கொள்வாயே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

உள்ளத்தில் குளிர் தருவாயே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வடிவம் தந்தாய் புதுவையில் நீரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

வடிவம் அமைத்தார் புதுவை அன்பரே
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி
தீர்த்த பாலகரே போற்றி போற்றி

சுபமங்களம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Nanganallur, Chennai

நவக்கிரஹ ஸ்துதி

சூரியன்

ஜபாகுஸ்ம லங்காஸம் காஸ்யபேயம் மஹாத்யுதிம்
தமோரிம் ஸர்வபாபக்நம் ப்ரண தோஸ்மி திவாகரம்

சனி

நீலாஞ்சன சமாபாஸம் ரவிபுத்ரம் யமாக்ரஜம்
சாயா மார்த்தாண்ட சம்பூதம் தம்நமாமி சனீஸ்வரம்

கேது

பலாஸ புஷ்ப ஸங்காஸம் தாராகாக்ரஹ மஸ்தகம்
ரௌத்ரம் ரௌத்தாத்மகம் கோரம்தம் கேதும் ப்ரணமாம்யஹம்

ராகு

அர்த்தகாயம் மஹாவீர்யம் சந்த்ராதித்ய விமர்தநம்
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம் தம் ராஹீம் ப்ரணமாம்யஹம்

அங்காரகன்

தரணீ கர்ப்ப ஸம்பூதம் வித்யுத் காந்திஸமப்ரபம்
குமாரம் சக்தி ஹஸ்தம்ச மங்களம் ப்ரணமாம்யஹம்

சந்திரன்

ததி சங்க துஷா ராராபம் க்ஷீணோர்தார்ணவ சம்பவம்
நமாமி சசிநம் சோமம் சம்போர் மகுட பூஷணம்

புதன்

ப்ரியங்கு கலிகா ஸ்யாமம் ருபேணாப்ரதிமம் புதம்
ஸௌம்யம் ஸௌம்ப குணோபேதம் புதம் ப்ரணமாம்யஹம்

குரு

குருர் விஷ்ணு: குருர்தேவோ மஹேச்வரஹ
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம் தஸ்மை ஶ்ரீ குரவே நமஹ

சுக்கிரன்

ஹீமகுந்த ம்ருணாலாபம் தைத்யாநாம் பரமம்குரும் ஸர்வ
ஸாஸ்த்ர ப்ரவக்தாரம் பார்கவம் ப்ரணமாம்யஹம்.

- சுப மங்களம்-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நூலின் விவரம்

தாள் : மேப்லித்தோ 18.6

அளவு : 1/8 டெம்மி செ.மீ.

எழுத்து : 11 புள்ளி

அச்சகம் : ஸ்ரீ புவனேஸ்வரி அச்சகம்
புதுச்சேரி - 3.
பேசி : 2224400

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,